பேராசிரியர்
முனைவர் ப.ச. ஏசுதாசன் அறக்கட்டளைச்
சொற்பொழிவுகள்

துறை வெளியீடு

தமிழாய்வுத்துறை

பிஷப் ஹீபர் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 017.

கல்லூரி முதல்வர்

பேராசிரியர் தே. சுவாமிராஜ் அவர்களுக்கு

நன்றிக் காணிக்கை



கல்லூரி முதல்வர் பேராசிரியர் தே. சுவாமிராஜ் அவர்களுக்கு 29.3.96 அன்று தமிழாய்வுத் துறையில் நடைபெற்ற பணிப்பாராட்டு விழாவின் போது இந்நூல் வெளியிடப்பெற்றது.

அன்பளிப்பு
முனைவர் ம. இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைகழகம்
தஞ்சாவூர்.

பேராசிரியர்
முனைவர் ப.ச. ஏசுதாசன் அறக்கட்டளைச்
சொற்பொழிவுகள்

துறை வெளியீடு

தமிழாய்வுத்துறை

பிஷப் ஹீபர் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 017.

பேராசிரியர் முனைவர் **ப.ச. ஏசுதாசன்**
அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

22.3.95

முதற்பதிப்பு : மார்ச் **1996**

பதிப்பும் உரிமையும் : தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி

விலை : ரூபாய் 15/-

அச்சாக்கம் : பிரிண்ட் பாயின்ட், தில்லைநகர்
திருச்சி - 18. ✆ 469732

முன்னுரை

1994 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 30 ஆம் தேதி, தமிழாய்வுத்துறையின் தலைவராகவும், துணை முதல்வராகவும் இருந்த டாக்டர் ப.ச. ஏசுதாசன் அவர்கள் பணி ஒய்வு பெற்ற போது அன்னார் பெயரில் தமிழாய்வுத் துறையினரால் ஓர் அறக்கட்டளை நிறுவப்பெற்றது. அந்த அறக்கட்டளையின் சார்பில் 23.3.95 அன்று 'புனைவியல் இயக்கம்' என்ற தலைப்பில், தமிழ்ப்பல்கலைக் கழக இலக்கியத்துறைத் தலைவர் டாக்டர் சோ. ந. கந்தசாமி அவர்களால் முதல் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது. இரண்டாவது சொற்பொழிவினை 24.2.96 அன்று 'இந்திய இராமாயண பால காண்டங்கள் - ஓர் ஒப்பிடு' என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் டாக்டர் அ.அ. மணவாளன் அவர்கள் நிகழ்த்தினார். இவ்விரு பொழிவுகளையும் ஒன்றாகச் சேர்த்து எமது தமிழாய்வுத்துறையினர் இன்று நூலாகக் கொணர்ந் துள்ளனர். இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழக்காரணமாக இருந்த எம் கல்லூரி முதல்வர் பேராசிரியர் தே. சுவாமிராஜ் அவர்களுக்கும், அறக் கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்திய அறிஞர் பெரு மக்களுக்கும் தமிழாய்வுத்துறையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூல் வெளிவரப் பெரிதும் துணையாகவும், தூண்டுதலாகவும் இருந்த துறைப் பேராசிரியர்களுக்கும் மிக்க நன்றி.

திருச்சி
27.3.96

இவண்
ஒய். டென்னிசன்
துறைத் தலைவர்.

புனைவியல் இயக்கம்

முனைவர் சோ. ந. கந்தசாமி
பேராசிரியர் & தலைவர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் – 5.

பேராசிரியர் டாக்டர் ப. ச. ஏசுதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவிற்குத் தலைமையேற்றிருக்கும் கல்லூரி முதல்வர் பேராசிரியர் தே. சுவாமிராஜ் அவர்களே, அறக்கட்டளைச் சொற்பொழிவில், விழாநாயகராக வீற்றிருக்கும் டாக்டர் ப. ச. எசுதாசன் அவர்களே! தமிழாய்வுத் துறைத்தலைவர் டாக்டர் ஒய். டென்னிசன் அவர்களே! இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவினை நுகரக்குழுமியிருக்கும், தமிழ்த்துறைப்பேராசிரியப் பெருமக்களே! பிற, கல்லூரிகளில் இருந்து வந்திருக்கும் பேராசிரியப் பெருமக்களே! தமிழாய்வுத் துறையின் ஆய்வாள நண்பர்களே! முதுகலை மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் டாக்டர் ப.ச. ஏசுதாசனின் அறக் கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துமாறு அன்புடன் பணித்த பிஷப் ஹீபர் கல்லூரி நிர்வாகத்தினருக்கும், தமிழ்த்துறையினருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புனைவியல் இயக்கம் என்ற தலைப்பில் என் அறக்கட்டளைச் சொற்பொழிவினைத் தொடங்குகின்றேன்.

இயக்கம் என்பது குறிப்பிட்ட கொள்கைக்காக இயங்கும் குழுவின் செயன்மையினைக் குறிக்கும். இயக்கத்தின் எழுச்சி இலக்கியத்தின் எழுச்சிக்கு ஏதுவாக அமைவது. பத்தி இயக்கம், திருமுறை இலக்கியம் தோன்றக் காரணமாகிய வரலாற்றுண் மையினை ஈண்டு எண்ணுதல் சாலும். ஐரோப்பிய நாட்டில் எழுந்த இலக்கிய இயக்கங்களில் புனைவியல் இயக்கம் (Romantic Movement) இந்திய நாட்டு இலக்கியங்களிலும் தாக்கத்தைப் பதித்துள்ள பாங்கினை ஒப்பியலார் நன்கறிவர். இவ்வியக்கம் எழுந்த காலச்சூழல், இதன் இலக்கியக் கொள்கைகள், குறிக்கோள்கள், இவ்வியக்கம் சார்ந்த படைப்பாளர் ஆகியன பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுதல், தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள புனைவியற் கூறுகளைப் புரிந்து கொள்ளுதற்குப் பெரிதும் உதவும்.

புனைவியலும் செவ்வியலும்

கி.பி. 18ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய இலக்கிய வரலாற்றில் புனைவியல் இயக்கத்தின் மூலக்கூறுகள் காணப்பெறுவன. கி.பி. 15ஆம் நூற்றாண்டில் எழுந்த இலக்கிய மறுமலர்ச்சி காரணமாகக் கிரேக்கம், இலத்தீனம் ஆகிய மொழிகளில் உள்ள இலக்கியங்களைப் பயில்வதும், அவற்றைப் படைப்பிலக்கியங்கள் முன்மாதிரியாகக் கொள்வதும் நாகரிகமாக எண்ணப் பெற்றன. இம்மொழிகளுக்குரிய இலக்கண விதிகளையும் திறனாய்வு நெறிகளையும் பிறழ்ச்சி இல்லாமல் பின்பற்றுதல் வேண்டும் என்ற புதிய செவ்வியல் இயக்கம் (Movement of Neo-classicism) வலுப்பெற்றது. இவ்வியக்கம் 17, 18 ஆம் நூற்றாண்டுகளின் ஒரு பகுதி வரையும் இலக்கிய உலகில் ஓங்கி நின்றது. அரிசுடாட்டில், ஒரசு, குவிண்டிலியன், இலாங்கினசு என்பார்தம் இலக்கியக் கொள்கைகள் புதிய செவ்வியலாரால் பெரிதும் பேணப்பெற்றன. செவ்வியல்

என்பது ஒழுங்கு, வரையறை, வார்ப்பு ஆகிய தன்மைகளுக்கு முதன்மை தந்தது. ஆதலின் வடிவமே (Form) இலக்கியத்தின் சிறப்புக்கூறு என்றும், பொருண்மை (Matter) அடுத்த நிலைக்குரியது என்றும் செவ்வியலார் எண்ணினர். மரபு காத்தல், வடிவ இனிமை, உணர்ச்சிக் கட்டுப்பாடு, புறவயமாதல் (Objectivism) அறிவார்ந்த நிலை, மேட்டுக் குடியினரைப் பாட்டுப்பொருளாக்குதல் என்பன செவ்வியல் இலக்கியத்திற்குச் சொல்லப்படும் சிறப்புப் பண்புகள் ஆகும். புதுமை பேணும் படைப்பாளர்கள் நடந்து தேய்ந்த பாதையினின்றும் விலகித் தம் உணர்ச்சிப் பெருக்கிற்குப் போக்காகவும், புதிய புதிய கற்பனைகளைப் புலப்படுத் தற்காகவும் அமைத்துக் கொண்ட புரட்சிமிக்க இலக்கிய வியல்தான் புனைவியல் (Romanticism) என்று சுட்டப் பெறுகிறது. புனைவியலார் கூண்டுக்கிளிகள் அல்லர்; விடுதலைப் பறவைகள். புரட்சி உள்ளம் படைத்தவர்கள். பழமையும் சிந்தனைச் சோகையும் கொண்ட புராதனப் போக்கைப் புறக்கணித்தவர்கள். வரையறுக்கப்பட்ட விதிமுறைகளைச் சட்டை செய்யாதவர்கள். செவ்வியலுக்குச் சொந்தமான செய்யுள் இலக்கணத்தின் கெடுபிடிகளிலி ருந்தும், வீர ஈரடிப்பாடலின் ஆதிக்கத்தினின்றும், உறைந்து போன நடையினின்றும், செவ்வியல் சொற்களை வரம்பின்றிப் பயன்படுத்தலினின்றும், சத்தசாலங்கள் மிக்க கவிச்சொல்லினின்றும், அலங்கார மொழி அமைப்பி னின்றும் புனைவியலார் தங்களை விடுவித்துக் கொள்ள முயன்றவர்கள். தொழில்மயம் பெற்றுவந்த உலகில் இயற்கைப் படைப்பின் விந்தைகளில் சிந்தை பறி கொடுத்தவர்கள். ஆக்கக் கற்பனையின் வாயிலாக முற்ற முடிந்த பரம உண்மையினை(Ultimate Reality) உணர முயன்றவர்கள். அதனால், இவர்கள் அகவயமானவர்கள் (Subjectivists) கள்ளம் கபடமற்ற ஊர்ப்புறத்து மக்களை இவர்கள் பாட்டுப்படுத்த முயன்றமைக்கு அவர்கள்

இயற்கையுடன் கொண்டிருந்த நெருக்கமும் ஒரு காரணம் எனலாம். வாழ்வியல் இரகசியங்களையும் இயற்கையின் மறைமொழிகளையும் புரிந்துகொண்டு புலப்படுத்தியவர்கள்.

சொல்விளக்கம்

Romanticism என்ற சொல்லினைத் தமிழில் புனைவியல், கற்பனையியல், உணர்ச்சிவீறு இயல் என்றெல்லாம் அறிஞர்கள் மொழிபெயர்த்தனர். இவை யனைத்துமே Romanticism என்பதன் கூறுகள் ஆகும். வசதிக்காக, ஏதாவது ஒரு குறியீட்டினைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் 'புனைவியல்' என்பதை இக்கட்டுரையில் நாம் ஆண்டுவருகிறோம். இதன் பொருண்மை பற்றிய ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. 'Romanz' என்ற பிரெஞ்சுச் சொல்லிருந்து Romance என்ற ஆங்கிலச் சொல் வந்தது என்பர். இப்பிரெஞ்சுச் சொல்லிற்கு 'மக்கள்மொழி' 'கொச்சைமொழி' எனப் பொருள் கூறுவர். செவ்வியல் மொழிகளாகிய கிரேக்கம், இலத்தீனம் ஆகியவற்றுடன் ஒப்பிடும்பொழுது மக்கள்மொழி கொச்சையாகத்தான் இருக்கும். பின்னர் பிராந்திய மொழி (Regional Language) என்ற பொருளிலும் இச்சொல் பயின்றது. நவீனப்பிரெஞ்சு மொழியில் புதினத்தையும் நவீன ஆங்கிலத்தில் காதற்பொருண்மை சார்ந்த கதை கூறு இலக்கியத்தையும் இது குறிக்கும். வீரதீரம், கற்பனைமயம், உணர்ச்சி போன்ற பொருண்மையிலும் இச்சொல் வழங்குதல் உண்டு. இலிலியன் பர்ஸ்ட் என்னும் அறிஞர், இச்சொல்லிற்கு அறிஞர்பலரும் கூறியுள்ள பொருள்கள் விளக்கங்கள் பற்றித் திட்ப நுட்பம் செறிந்த சிறுநூல் ஒன்று யாத்துள்ளமை இங்கு சுட்டத்தகும். ஒருசில விளக்கங்களை இங்குக் குறிப்பிடுதல் ஏற்புடையது.

1. வாட்டர்அவுசு (Waterhouse) என்பார், நடப்பியலினின்றும் தப்பிச்செல்லும் முயற்சிக்கு 'Romanticism' என்று விளக்கம் தந்தார்.

2. ஆபர்குரோம்பி (Abercrombie) என்னும் திறனாய்வாளர், புற அனுபவத்தினின்றும் தன்னை உள்ளிழுத்துக்கொண்டு அகவயமாகத் தியானித்தல் என்பர்.

3. சார்ச்சு சாண்டு (George Sand) என்பார், பகுத்தறிவின் விழுமிய உணர்ச்சியும், சிந்தனையில் விழுமிய கற்பனையும் வருதல் என்பர்.

4. விக்டர் யூகோ (Victor Hugo) என்னும் பிரெஞ்சுப் புனைவியலார் 'இலக்கியத்தில் நெகிழ்ச்சிநிலை' (Liberalism in Literature) என்பர்.

5. பிரெஞ்சுப்புரட்சிக்கு வித்திட்டவர்களில் முதல்வராகப் போற்றப்படும் உரூசோ (Rousseau) இயற்கையை நோக்கிச் செல்லுதல் (Return to Nature) என்று விளக்கம் தந்தனர்.

மேலும் விளக்கங்கள் பல உள. இவை புனைவியலின் ஒவ்வொரு கூறுகளாக எண்ணற்பாலன. இவற்றில் ஒரு குறிப்பிட்ட கூற்றிற்கு முதன்மை கொடுத்த படைப்பாளரே பலராக உள்ளனர்.

புனைவியல் இலக்கிய இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஓரளவு கண்டோம். இந்த இயக்கம் தோன்றுதற்குரிய முக்கியக் காரணங்களை அடுத்துக்கூறுதல் தகும்.

புனைவியல் இயக்கக் காரணிகள்

காலகாலமாகப் பின்பற்றப்பட்டுவந்த மரபுகளையும், நிலைகொள்ளப் பெற்ற இலக்கியச் சட்டங்களையும் பழமைவாதிகள் கூடுதலாக வலியுறுத்தியமை புதிய கொள்கையும் போக்கும் கொண்ட புரட்சிச் சிந்தனை யாளர்க்கு ஒத்துவராமை ஒரு காரணம் ஆகும். இருக்கின்ற விதிகளுக்குள் புதுமைகளைப் புகுத்த முடியாமல் போகவே வெளிப்படையான எதிர்ப்பு வெடித்தது. பாடுபொருள், மனப்போக்கு, வடிவம் என்பன குறித்த புதுமை நோக்கும் ஒரு காரணம். அனைத்துக்கும் மேலாகப் பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கமே புனைவியல் இயக்கத்தின் எழுச்சிக்கு மூலகாரணம் என்பர். கி.பி. 1776 இல் அமெரிக்க நாட்டில் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக நடந்த புரட்சிப்போரில் வாகை பெற்றுத்தந்துவிட்டுத் தாயகம் திரும்பிய பிரெஞ்சு வீரர்களால் தாயகத்தில் மன்னன் பதினாறாம் லூயி கொடுங்கோல் புரிவதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஒழுக்கச் சீர்கேட்டுடன் அம்மன்னன் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள எளிய மக்களின் குரலைப் புறக்கணித்து ஆடம்பர வாழ்வில் புலனுகர்ச்சியில் காலத்தைப் போக்கினான். மாபெரும் பிரெஞ்சுச் சிந்தனையாளர்கள் ஆகிய வால்டேர், உரூசோ, மாண்டேஸ்குயூ, டிடெரோ என்போர் அரசனின் கொடுங்கோன்மையினையும், மக்களை மதியாமையினையும் இடித்துக்காட்டித் தங்கள் எழுத்துக்கள் மூலம் எங்கும் விழிப்புணர்வும் விடுதலை வேட்கையும் கொள்ளச் செய்தனர். உரூசோவின் தாரகமந்திரச் சொற்களாகிய விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் (Liberty, Equality and Fraternity) என்பன மக்கள் உணர்வினைக் கிளர்ந்தெழச் செய்ததால் பிரெஞ்சுப்புரட்சி எழுந்தது. இத்தகைய உணர்வுகள் பிரெஞ்சு மக்களைத் தவிர ஆங்கிலேய செருமனி மாந்தரையும் ஆட்கொண்டன. புனைவியல் இயக்கத்தின்

தந்தை என்று உரூசோ போற்றப்படுதல் இங்கு எண்ணத்தக்கது.

அறிஞருள் ஒருசாரார் புனைவியல் இயக்கம் ஆங்கில மண்ணில் இயல்பாக உருப்பெற்றது என்பர். அவர்கள் கருத்தின்படி எலிசபெத்து அரசியின் காலம், ஆங்கில இலக்கிய வரலாற்றில் முதல் புனைவியல் காலம் ஆகும். புதியசெவ்வியலாராகிய டிரைடன், போப் முதலிய இலக்கியர், எலிசபெத்துக் காலத்திய படைப்பாளரின் புனைவியல் பண்புகளை ஏலாதவர் என்றும் இயம்புவர். கோலரிட்சு, வேர்ட்சுவொர்த்து ஆகிய கவிஞரின் காலம் இரண்டாவது புனைவியல் காலம் என்றும் கூறுப.

ஆங்கிலப் புனைவியல் கவிஞர்கள்

கி.பி. 1798 இல் வேர்ட்சுவொர்த்து, கோலரிட்சு இருவரும் வெளியிட்ட "The Lyrical Ballads" (இசையியல் கதைப்பாட்டுகள்) என்ற கவிதைநூல் ஆங்கிலப் புனைவியல் இயக்கத்தில் ஒரு புதிய இயலைத் தொடங்கி வைத்தது. இந்நூலிற்கு வேர்ட்சுவொர்த்து எழுதியுள்ள முன்னுரை இவ்வியக்கத்தின். பிரகடனப்பத்திரமாகக் (Manifesto) கருதப்படுகிறது.

ஆங்கிலப் புனைவியல் இயக்கத்தில் கவிஞர்கள் வேர்ட்சுவொர்த்து (கி.பி. 1770 - 1850), கோலரிட்சு (கி.பி. 1772 - 1834), பைரன் பிரபு (கி. பி. 1788 - 1824), ஷெல்லி (கி. பி. 1792 - 1822), ஜான் கீட்சு (கி. பி. 1795 - 1821) என்போர் புகழ்பெற்ற கவிஞர்கள். சேக்சுபியர்க்குப்பின், இவர்கள்தாம் ஆங்கில இலக்கியப் பயிரைச் செழுமையாக வளர்த்தவர்கள். புதிய படைப்புகள் பலவற்றால் அமரத்துவம் அடைந்தவர்கள், ஆங்கிலக்கவிதை இவர்களால் தனிப் பொலிவும் வலிவும் வனப்பும் எய்தியது.

நுணுகிநோக்கின், புனைவியல் இயக்கம் சார்ந்த இலக்கியத்தின் மையக் கூறுகளாகப் பின்வருவனவற்றைச் சுட்டுதல் தகும்.

1. இலக்கியநெகிழ்ச்சி
2. ஆக்கக் கற்பனையும், கனவுதலும்
3. உணர்ச்சி வீறு
4. இயற்கை மீக்கூறு
5. தப்பித்தல்
6. புதுப்பித்தல்
7. பழமை எதிர்ப்பு
8. விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம்
9. மனித நேயம்
10 ஊர் (Rural) மாந்தர்க்கு முதன்மை

இன்னோரன்ன இயல்புகள் புனைவியல் சார்பின. ஐரோப்பிய இலக்கியப் பயிற்சியால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்திய இலக்கியங்களிலும் புனைவியல் செல்வாக்குச் செலுத்தியது. தமிழ்க்கவிதை இலக்கியத்தில் இவ்வியக்கத்தின் தாக்கம் தெளிவாகக் காணப்படுகிறது.

தமிழ்க் கவிதை இலக்கியத்தில் புனைவியல் கூறுகள்

ஐரோப்பிய நாட்டில் தோன்றிய புனைவியல் இயக்கம் தமிழ்க் கவிஞர்களின் படைப்புக்களில் செல்வாக்கைப் பதித்துள்ளது. மகாகவி பாரதியார் புனைவியல் கவிஞருள் ஒருவராகிய செல்லியைப் பெரிதும் பின்பற்றினார். தம்மைச் செல்லிதாசன் என்றே அழைத்துக்கொண்டார். அவர் வழியில் கவிதை புனைந்த பாவேந்தர் தம்மைப் பாரதிதாசன்

என்று கூறிக்கொள்வதில் நிறைவுபெற்றார். பாரதியார் நாடறிந்த புனைவியல் கவிஞர். அவரைவிடப் பாவேந்தரிடம் புனைவியல் பண்புகள் கூடுதலாகக் காணப்படுதல் ஆராய்ச்சியினால் புலனாகிறது.

புதுநெறி காட்டிய புலவன்

பழகிப்போன, தேய்ந்து அறுந்துவிட்ட பழைய நடை, சொல் முறை, பாடுபொருள் என்பனவற்றை விடுத்துச் சமுதாய உணர்வுடனும் மனித நேயத்துடனும் மக்களின் மேம் பாட்டிற்காகவும் நாட்டு விடுதலைக்காகவும் பெண்ணி னத்தின் உரிமைக்காகவும் குரல்கொடுத்த மகாகவி பாரதி யாரின் பாடல் பண்புகள் பாவேந்தரை ஆட்கொண்டன. எனவேதான் அவற்றைப் புதுமுறை, புதுநடை, புதுநெறி, புதுப்பொருள் என்ற சொற்களினால் பாவேந்தர் சுட்டினார். பாரதியாரே,

'சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது சொற்புதிது
சோதி மிக்க நவகவிதை '

எனச் சுயவிமரிசனம் செய்துகொண்ட திறமும் இங்கு எண்ணற்பாலது. 'புதுநெறி காட்டிய புலவன் ' தமிழ்ப் புனைவியல் மரபின் முதல்வர் எனக் கூறுதல் கூடும்.

பாரதி தோன்றுதற்கு முன்னிருந்த இலக்கியச் செவ்வியல் நிலையும் பாரதிமுதல் எழுந்த புதுநெறிப் புனைவியல் முறையும் பாவேந்தரின் பாடல்களில் பல இடங்களில் பயின்றுள்ளன. ஓரிரு சான்றுகள் காண்போம்.

கடவுளைப் பாடுவதே கவிதை; அதுவும் பொருள்புரியப் பாடுதல் கூடாது; பிறர் மதங்கள் யாவும் பொய் பேசுவன; பழமையினைப்பின்பற்றுதலும் புதுமையினைப் புதைத்தலும் வேண்டும்; பெண்ணின்பால் இன்புறும் பொழுதும் 'பெண்ணால் அழிவு ஏற்படும்' என்று

பாடுதல் மரபு; பழைய இலக்கியவகைகளைப் பார்த்து வார்ப்பாக இலக்கியம் படைத்தல் வேண்டும். கலம்பகத்தைப் பார்த்து மற்றொரு கலம்பகமும், அந்தாதியைப் பார்த்து இன்னொரு அந்தாதியும், மாலை, காவியம் முதலியவற்றைக் கண்டு சமமான மாலை, காவியங்களையும் படைத்தல் செவ்வியல்மரபு. வழக்காறு ஒழிந்ததைப் பாடித்தான் பிழைக்கும் நிலை இருந்தது. இத்தகைய பண்டிதப் பழக்கத்தை வேரொடும் களைந்து எறிய, ஆற்றல் மிக்க புதிய நடையில் புரட்சிமிக்க கவிதைகளைப் பாரதி பாடத்தொடங்கினார். பாரதநாடு, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், தாய்மொழிப்பற்று, பக்திப்பொதுநோக்கு, பெண்ணுரிமை, புதிய ஆத்திசூடி எனப் பல புதிய பொருள்களைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்தவர் பாரதி. இங்ஙனம் பாரதி, 'எழுத்தில் சிங்க ஏற்றின் குரலைப்' பாய்ச்சியதால் விழுந்துகிடந்த மாந்தர் எழுந்துநின்றார்; ஒளிபெற்றார் ; உரிமை பெற்றார்.

பாரதியாரின் கவிதைகளில் பழைய இலக்கிய மரபுகளைக் காலத்திற்கேற்பப் புதுமைசெய்து கொடுத்தல், இயற்கையைத் தெய்வமாகப் பரவுதல், உருவகப் பாங்கு முதலிய பல புனைவியல் பண்புகள் சுட்டுதற்குரியன. பாஞ்சாலிசபதம் பழைய கதை. பாரததேவியாக - சுதந்திரதேவியாகப் பாஞ்சாலியைப் பார்க்கிறார் பாரதி. இது புதுமை. ஆழ்வார் பாடிய கண்ணன் பாசுரங்களினின்றும் பாரதி பாடிய கண்ணன் பாட்டு, கற்பனையும் உணர்ச்சியும் புதுமையும் மிக்கது. குயில் பற்றி மாணிக்கவாசகர், ஆண்டாள் பாடிய முறை வேறு. பாரதியாரின் குயில்பாட்டின் பாங்குவேறு. நான்மணிமாலை, பள்ளியெழுச்சி, பஞ்சகம், தசாங்கம், தூது, சீட்டுக்கவி முதலிய பழைய இலக்கிய வகைகள் ஆகிய மொந்தையில் புதிய கள்ளினைப் பெய்து புரட்சி செய்தவர் பாரதியார். இங்ஙனம் பாரதியார் பாடல்களில் காணப்பெறும் புனைவியல் கூறுகள் பற்பல.

அவர்வழி வந்த அரும்பெரும் கவிஞர் பாரதிதாசனின் படைப்புகளில் இடம்பெறும் புனைவியல் கூறுகள் சிலவற்றை ஈண்டுக் காணலாம்.

பாரதிதாசனின் புனைவியற் கவிதை

புனைவியற் கவிஞர்கள் கவிதை பற்றிய தெளிந்த கொள்கை உடையவர்கள். உணர்ச்சியும், ஆக்கக்கற்பனையும் கவிதைக்கு அடிப்படை. தெளிவும் எளிமையும் பொருந்தச் சொற்கள் வழங்குதல் வேண்டும். உள்ளத்திலிருந்து பொங்கிப்புறப்படும் உணர்ச்சி வெள்ளத்தின் வடிவமாகக் கவிதை இருத்தல் வேண்டும். நைல் ஆற்றை நோக்கிப் புனைவியற் கவிஞர் செல்லி பாடிய கவிதையில்,

"Beware, O Man - for knowledge must to thee
Like the great flood to Egypt ever be"

எனவரும் பகுதி எண்ணத்தக்கது. எகிப்து நாட்டினை வளப்படுத்தும் நைல் நதியைப் போல அறிவு வெள்ளமாகப் பாயவேண்டும் என்பது அவர் உள்ளம். பாவேந்தர்,

'கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்'
'கருத்தூற்று மலையாற்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்'
'நதிப்பெருக்கைப்போல் கவிதை நற்பெருக்கின் இன்பவொளி'

எனப் பலவாறு பாடியிருத்தல் புனைவியற் பண்பினைப் புலப்படுத்துவதாகும்.

எளிய நடையில் யாவருக்கும் விளங்க மக்கள் பயிலும் சொற்களில் கவிதை பாடப்படுதல் வேண்டும் என்பதைப் புனைவியற் கவிஞர் வேர்ட்சுவொர்த்து அறிவுறுத்தியுள்ளார்.

"எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்"
"ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்"
"பலர்க்கும் புரியப் பாடுங்கள்"

என மொழிநடை பற்றிப் பாவேந்தர் கூறுதல் நோக்கத்தக்கது. மக்கள் மொழியில் புழங்கும் பேச்சுச் சொற்கள் பல அவர் பாடல்களில் இடம்பெறுதல் காணலாம். ஊர்ப்புற மாந்தர் **(Rustic Characters)** அவர் படைப்புகளில் சிறப்பிடம் பெற்றனர்.

பாடுபொருள்

நிலமானியச் சமுதாயத்தை எதிர்த்துப் புரட்சி செய்தல், கோனாட்சிக்கு எதிராக மக்களாட்சிக்குக் குரல் கொடுத்தல் என்பன தமிழருக்குப் புதிய சரக்கு. புரட்சிக்கவிஞரின் கடல் மேற் குமிழிகள், காதலா கடமையா முதலிய கவிதைகளில் இத்தகைய புதிய உரிமைக்குரல் ஒலிக்கிறது. விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற பிரெஞ்சுச் சிந்தனையாளர் உரூசோவின் புரட்சிச் சிந்தனைகள் பிரெஞ்சு ஆட்சியில், புதுவையில் வாழ்ந்த பாவேந்தரையும் ஆட்கொண்டன. அவர் பாடல்கள் அனைத்தின் சாரமும் இம்மூன்றில் அடங்கும். பாரதியாரைவிடப் பெண்ணின் உரிமைக்காகவும் உயர்விற்காகவும் முதன்மைதந்து பாடியவர் பாவேந்தரே. குடும்பக் கட்டுப்பாடு பற்றிக் குரல்கொடுத்த முதல் இந்தியக்கவிஞர் இவரே.

புனைவியல், வீர தீரத்தையும் உட்கொண்டது. வீர உணர்ச்சிமிக்க கவிதைகள் பல பாவேந்தரின் படைப்பு. வீரத்தாய் என்ற கவிதையில்,

"கோழியும்தன் குஞ்சுகளைக் கொல்லவரும் வான்பருந்தைச்
சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவியில்"

என்று பாடியுள்ள பகுதியில் தீர உணர்வு மேலோங்கியுள்ளது. இதுவே புனைவியலின் உச்சி.

தமிழைப் பாடற்பொருளாகப் பாரதியார் கொண்டிருப்பினும் பாவேந்தரிடம்தான் அது முழுமையும் விழுப்பமும் பெற்று விளங்குகிறது. இதுவும் கவிதைக்கு ஒரு புதுப்பொருளே. தொழிலாளர் உரிமைநலம், தீண்டாமை ஒழிப்பு, உலகநோக்கு என்பன இவர் பாடல்களின் தனிச்சிறப்பு.

கண்ணகி புரட்சிக்காப்பியம், மணிமேகலை வெண்பா, எதிர்பாராத முத்தம், அகத்தியன் விட்ட புதுக்கரடி என்பன பழைய கதைகளை இக்கால உணர்வுக்கு ஒத்தவகையில் புதுப்பித்துப் படைத்த சிறந்த கவிதைப் படைப்புக்கள் எனலாம். இவையும் ஒரு வகையில் புனைவியற் கூறுகளாகவே கொள்ளுதற்கு உரியன.

புனைவியற் கற்பனை (Romantic Imagination)

சி.எம். பவுரா போன்ற திறனாய்வாளர்கள் புனைவியற் கவிதையில் ஆக்கக் கற்பனை முதன்மைபெறும் என்று கருதினர். படைப்பாற்றலும் உள்ளுணர்வும் இவ்வகைக் கற்பனைத்திறனால் கவிஞன் பெறுவன. பகற் கனவும் இக்கற்பனையின் விளைவே. இயற்கைக்கும் பின்னால் கரந்தொளிரும் முழுமையான உண்மையினை (Absolute Reality) இக்கற்பனையால் உணர்ந்து, உணர்த்த வல்லவன் கவிஞன். கற்பனை உலகு வரம்பற்றது. இயற்கைப் பொருள்களில் பொருந்தியுள்ள வனப்பினைச் சுவைக்க இவ்வாற்றல் பயன்தரும். புலன்கடந்த காட்சிகளைக் கனவில்கண்டு மகிழ்தற்கும் இக்கற்பனை உறுதுணை நிற்கும். தனிமனிதனின் உயிரும் இயற்கையின் உயிரும் ஒன்றுபட்டு இன்புறுதற்கு இக்கற்பனை ஏதுவாகும்.

பாவேந்தர் பாடல்களில் புனைவியற் கற்பனைக் கூறுகள் மிகுதியாகக் காணப்பெறுவன. ஒருசிலவற்றை உற்று நோக்குதல் சாலும். 'கானல்' என்ற கவிதையில்

'திடுக்கென விழித்தேன் – நல்ல
சீதலப் பெருஞ்சோலை
நெடும்பகற் கனவில் – கண்ட
நெஞ்சுறுத்தும் கானல் '

என்ற பகற்கனவினைப் பாரதிதாசன் காண்கிறார். இதனைப் புனைவியலார் "Day Dreaming" என்பர். இதுவும் ஆக்கக் கற்பனையின் ஒருவகை எனலாம். மகாகவி பாரதியும்

'இன்னிசைத் தீம்பாடல் இசைத்திருக்கும் விந்தைதனை
முன்னிக் கவிதைவெறி மூண்டே நனவழியப்
பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே கண்டேன் யான் '

என்று குயில்பாட்டில் குறிப்பிடுதல் காணத்தக்கது. இத்தகைய கனவுகள், நடைமுறை வாழ்வினின்றும் கவிஞர் தப்பித்துச் செல்லுதற்கு (Escapism) வாயிலாக அமைவன. பாவேந்தரிடம் இப்பண்பு பலபாடல்களில் காணப்படுகிறது. 'தமிழ்க்கவிதை' என்ற கவிதையில்,

'தமிழ்நா டெங்கும் தடபுடல் அமளி
தமிழின் தொண்டர் தடுக்கினும் நில்லார்
ஓடினார் ஓடினார் ஓடினார் நடந்தே !
கற்கண்டு மொழியில் கற்கண்டுக் கவிதைகள்
வாழ்க்கையை வானில் உயர்த்தும் நூற்கள்
காதல் ததும்பும் கண்ணாளன்தனைக்
கோதை ஒருத்தி கொச்சைத் தமிழில்
புகழ்ந்தா ளென்று பொறாமல் சோர்ந்து
வீழ்ந்தான் ! உடனே <u>திடுக்கென விழித்தேன்</u>

அந்தோ ! அந்தோ ! பழைய
நைந்த தமிழரொடு நானிருந்தேனே'

எனவரும் பகற்கனவினைப் புனைவியல் சார்ந்ததாகவே கருதலாம்.

'கனவொழிய நனவுலகில் இறங்கிவந்தோம் நாங்கள்'

எனப்பாடும் பகுதியும் பார்க்கத்தக்கது. இவ்வாறே ' கற்பனை உலகில் :' என்ற கவிதையும் அமைந்தது.

'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற கவிதையில் பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர், ஆங்கிலேயர் பேசும் பேச்சுக் களைத் தமிழர் புரிந்துகொள்ளுதற்கு ஒரு மூலிகையினைக் கண்டுபிடித்துக் காட்டுதலும் புனைவியல் கற்பனையே எனலாம். கடவுள் நம்பிக்கை இல்லாத கவிஞர்.

'படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து
பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்
அடிசோர்தல் கண்டார்கள்'

என்று அம்மனுக்குப் பாலாபிசேகம் செய்தமையை அமுதவல்லி கண்ணீரால் நனைந்தமைக்கு உவமை கூறுதலும் இவ்வகைக் கற்பனையே.

இயற்கையை மனிதப்படுத்தல் (Persoification of Nature)

புனைவியற் கூறுகளில் இயற்கைப் பொருள்களை மனிதப்படுத்திப் பாடுதல் ஒரு சிறப்புப் பண்பு என்பர் திறனாய்வாளர். செல்லி, பைரன், கீட்சு முதலிய ஆங்கிலப் புனைவியற் கவிஞர்களிடம் இப்பாங்கு மிகுதியும் காணப்படும். பாவேந்தர், இவ்வகையில் உயர்ந்து நிற்கிறார். இயற்கைத்தேவி, ஆற்றுத்தாய், அருவி, நெடியோள், முதியோள், அன்னை, தடங் கடற் பெண்ணாள், திசைமகள், கிழக்குப் பெண்ணாள், அந்திப் பெண்ணாள், மாலை நாயகி,

மாலைப்போற்றும் அன்னை, குன்ற மங்கை, சோலை அணங்கு, என்று வரும் உருவகங்கள் பற்பல. அழகின் சிரிப்பில் இயற்கையைக் கவிஞர் தொழுது போற்றுகிறார். 'ஆகாயவாணி' வீட்டில் என்று ஒரு பாட்டில் ஆகாயத்தைப் பெண்தெய்வம் ஆக்கினார். புரட்சிக்கவியில் 'வாணி அழைத்திட்டாள் நற்கவிதை' எனப் பாடினார்.

இயற்கைக் கவிஞரானவேர்ட்சுவொர்த்து,

> "Yes, I remember when the changeful earth,
> And twice five summers on my mind stamped
> The faces of the moving year, even then
> I held unconscious intercourse with beauty" (The Prelude)

என்றுதன் ஆன்மீக அனுபவத்தை மிகவும் உயர்ந்த உணர்வில் படைத்துள்ளார். பாவேந்தர்க்கும் இத்தகைய அனுபவங்கள் உண்டு. சான்றாக.

> 'அப்பூஞ்சோலை,
> எனைத்தன்வசம் ஆக்கிவிட்டாள் ஒருநாள்'
>
> 'என்றன் செந்தமிழ்ப் பத்தினி வந்துவிட்டாள்'
> (பாரதிதாசன் கவிதைகள் ப. 96)
>
> 'வழியொடு வந்த நீயோ வழக்கம்போல் இன்பம் தந்தாய்'
>
> 'மீண்டும் நீபுணர்ந்தாய் என்னை'
> (அழகின்சிரிப்பு, ப. 12)

மொழியையும் இயற்கை போல் தலைவியாகக் கற்பனை கண்டவர் பாவேந்தர். தென்றல் காற்றுடன் உயிர் சேர்ந்து பெற்ற இன்ப அனுபவம் கடைசி இரண்டு அடிகளில் புலனாகிறது. இப்பகுதியை மேலேசுட்டிய ஆங்கிலக் கவிதையில் கடைசி அடியுடன் ஒப்புநோக்கி இருவர் அனுபவமும் பெரும்பாலும் ஒத்திருக்கக் காணலாம்.

இயற்கை ஆசான் (Nature as Teacher)

இன்புறுத்தலுடன் கவிதை அறிவுறுத்துலும் வேண்டும் என்பது வேர்ட்சுவொர்த்தின் எண்ணம். இக்கவிஞர்

"Every great poet is a Teacher; I wish either
To be considered as a Teacher or as nothing"

என்று கூறுதல் நோக்கத்தக்கது.

"Come forth into the light of things
Let nature be your Teacher" (The Tables Turned)

என்று வேர்ட்சுவொர்த்து பாடுதல் எண்ணறற்பாலது. ஏடு சொல்லித்தராத பல உண்மைகளை இயற்கைப் பொருட்கள் உணர்த்துகின்றன. அவற்றை ஊன்றி நோக்கி உணரும் உள்ளத்துடன் அணுகுதல் வேண்டும் என்பது அவர் கருத்து. இதுவும் புனைவியல் சார்ந்ததே. பாவேந்தர் படைப்புகளில் இக்கருத்து மேலோங்கி உள்ளது. ஒருசில சான்றுகள் கூறலாம். புறாக்கள், காகம், சிட்டுக்குருவி, தேனீக்கள், எறும்புகள், செடிகள், மரங்கள், நாய், வானவில், என்று எத்துணையோ இயற்கைப் பொருள்களின்வழி பல உண்மைகளைப் பாவேந்தர் உணர்த்துகிறார். புறாக்கள் ஒழுக்கம் காப்பன. பகிர்ந்துண்ணும் பாங்கும் குழு உணர்வும் காகங்கள் கற்பிப்பன. சுறுசுறுப்பாகச் செயல்படுவதற்குச் சிட்டுக்குருவி பாடம் சொல்லும். பிள்ளைகளை வளர்ப்பதில் தேனீக்கள் எடுத்துக்காட்டு. எறும்பின் தவம் என்ற பாடல் விடாமுயற்சியும் விரைவும் கொண்ட எறும்பின் நிலை மக்களுக்கு முன்மாதிரி என்கிறார் பிறவும் அன்ன.

மனிதநேயம் (Humanism)

புனைவியற் கவிதையில் விஞ்சிநிற்கும் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற பண்புகள் பாவேந்தர் பாடல்களில் நிறைந்திருத்தலை முன்னரும் குறித்துள்ளோம். அவர் கட்டுரை ஒன்றில்,

"சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ததும்பும் உள்ளம்
வேண்டும்
அதன்பிறகு வெற்றி, அதன்பிறகு இன்ப வாழ்வு
சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் வாழ்க!"

என்று பாவேந்தர் எழுதியுள்ளார். இக்கட்டுரையின் பொருட்சிறப்புக் கருதிப் பேரறிஞர் அண்ணா, 23.5.1945 'திராவிடநாடு' இதழில் இதனை மீண்டும் வெளியிட்டுள்ளார் என்பது எண்ணத்தக்கது. இம் முப்பொருள் பற்றிப் பாவேந்தர் பாடிய கவிதைகள் பற்பல.

பிரெஞ்சுப்புரட்சிக்கு வித்திட்ட மற்றொரு சிந்தனையாளர் விக்டர் யூகோவினைப் பாவேந்தர் நன்கு அறிந்தவர். இரண்டிடங்களில் அவரைக் குறித்துள்ளார். புனைவியல் எழுத்தாளராகிய இவர்தம் தாக்கமும் பாவேந்தர்க்கு அமைந்திருத்தல் வேண்டும்.

மனிதநேயமே புனைவியல் கவிஞரின் உள்ளம். இவ்வுள்ளம். விரிந்து பரந்துள்ள நிலை பாவேந்தரிடம் காணப்படுகிறது. இதன் வெளிப்பாட்டினை.

"தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்"

"அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை !
அணைந்துகொள் ! உன்னைச் சங்கம மாக்கு !
மானிட சமுத்திரம் நானென்று கூவு"

எனவரும் பாடல்களில் பார்க்கலாம்.

தொழிலாளர் நலனுக்குப் பாடியவர் பாவேந்தர். இவ்வியல்பும் புனைவியல் பாவலரிடம் காணப்படுவதே. 'கூடித் தொழில் செய்க' 'தொழிலாளர் விண்ணப்பம்' 'வியர்வைக் கடல்' என்பன சில சான்றுகள்.

பெண்ணுரிமைக்குப் பெரிதும் முயன்றவர். எதிர் பாராத முத்தம், காதலா கடமையா முதலிய படைப்புகளில் பெண்ணின்பெருமை பேசப்படுகிறது. பொதுவாகப் பெண் பாத்திரங்களுக்குப் பாவேந்தர் முதன்மை தந்து படைத்துள்ளார் எனலாம். தமிழர் விடுதலை உரிமை என்று பாடினாலும், முடிந்த நிலையில் மனிதவிடுதலை, ஒரே உலகு முதலிய விரிந்த சிந்தனை காணப்படுகிறது. புதியதோர் உலகு படைத்த பாவேந்தரின் படைப்புகளை நுணுகி நோக்கு மிடத்துப் புனைவியற் கூறுகள் பலவும் பொருந்தியிருத்தல் புலனாகும்.

பாவேந்தரின் அடிச்சுவட்டில்

பாவேந்தர் அடிச்சுவட்டில் பாடிய வாணிதாசன், சுரதா, கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தமிழ்ஒளி முதலியோர் பாடல்களிலும் புனைவியற் கூறுகள் இழையோடியிருத்தல் காணலாம். எனினும் மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகளில் மட்டுமே இவை சிறப்பாகக் காணப்பெறுவன எனலாம். இருவருள்ளும் பாவேந்தர் படைப்புகளில் கூடுதலாக இவை இடம்பெறுதல் கூர்ந்து நோக்கத்தக்கது.

இந்திய இராமாயண பால காண்டங்கள் - ஓர் ஒப்பீடு

முனைவர் அ. அ. மணவாளன்
பேராசிரியர் & தலைவர்
தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் டாக்டர் ப. ச. ஏசுதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவிற்குத் தலைமையேற்றிருக்கும் கல்லூரி முதல்வர் பேராசிரியர் தே. சுவாமிராஜ் அவர்களே, அறக்கட்டளைச் சொற்பொழிவின் விழாநாயகராக வீற்றிருக்கும் டாக்டர் ப. ச. ஏசுதாசன் அவர்களே, தமிழாய்வுத்துறைத் தலைவர் டாக்டர் ஒய் டென்னிசன் அவர்களே, இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவினை நுகரக் குழுமியிருக்கின்ற பிஷப் ஹீபர் கல்லூரிப் பேராசிரியர்களே, உருமு தனலக்குமி கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் அரங்கராசன் அவர்களே, தமிழாய்வுத் துறை ஆய்வாள நண்பர்களே, மாணவர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் டாக்டர் ப. ச. ஏசுதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துமாறு அன்புடன் பணித்த பிஷப் ஹீபர் கல்லூரி நிர்வாகத்தினருக்கும், முதல்வருக்கும், தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் ஆசிரிய நண்பர்கட்கும் என்னுடைய மகிழ்வோடு கூடிய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய இராமயண பால காண்டங்களை ஒப்பீடு செய்ய முனைந்த என் முயற்சிக்குக் கீழ்க்காணும் நூல்கள் பயன்பட்டன. இவற்றுள் தமிழ், இந்தி, தெலுங்கு, வடமொழி

என்னும் மொழிகளில் எழுந்த நூல்கள் மூலவடிவிலும், ஏனைய பல்வேறு மொழிகளில் அமைந்த நூல்கள் ஆங்கிலம் அல்லது இந்தி மொழிகளின் மொழிபெயர்ப்பு வடிவிலும் இவ்வாய்வில் எனக்குப் பயன்பட்டன

I இராமாயண நூல்கள்

சமஸ்கிருதம்

1. *வான்மீகி இராமாயணம் (கி.மு. 3 அல்லது 4 ஆம் நூற்றாண்டு) (வட புல, தென் புல வழக்குகள்)*

இராமகாதை நுவலப்படும் பிற சமஸ்கிருத நூல்கள்

1. மகாபாரதம் : (நான்கிடங்களில்)

ஆரணிய பருவம் 147 : 28-38 ; 252 - 275
துரோண பருவம் 59 : 1- 31
சாந்தி பருவம் 22 : 51 - 62
ஏறக்குறைய 700 பாடல்களில் இராமகாதை குறிக்கப்படுகிறது.

2. புராணங்கள் : (முதன்மையானவை)

1. *விஷ்ணு புராணம் (கி.பி. 4) (IV, 4,5)*
2. *பிரும்மாண்ட புராணம் (கி.பி. 4) (2. 21)*
3. *வாயு புராணம் (கி.பி. 5) (II 26) விஷ்ணு புராணம் போன்றது.*
4. *பாகவத புராணம் (கி.பி. 6) (IX 10 - 11) இங்குதான் சீதை திருமகளின் அவதாரம் என்னும் செய்தி முதன் முதலில் கூறப்படுகிறது.*
5. *கூர்ம புராணம் (கி.பி. 7) (I- 19: 1; II 34)*
6. *அக்கினி புராணம் (கி.பி. 8-9) (5-12) வான்மீகியின் சுருக்கம்*
7. *நாரதர் புராணம் (கி.பி. 10) (I. 79; II. 75)*

8. பிரம்ம புராணம் - அரிவம்சத்தின் சுருக்கம்
9. கருட புராணம் (கி.பி.10) பெரும்பான்மையும் பிற்கால இடைச் செருகல்கள்.
10. ஸ்கந்த புராணம் (கி.பி. 8-க்குப்பின்) (II 30) சிற்சில செய்திகள்
11. பத்ம புராணம் (கி.பி. 12-15) (116 படலம், உத்தர: 24, 43-44)

சிறியன

1. தர்மோத்தர புராணம் (கி.பி. 7)
2. நரசிம்ம புராணம் (கி.பி. 4-5) (இயல் 47-52)
3. தேவி பாகவதம் (கி.பி. 10, 11) (III 28-30)
4. பிரகதர்ம, சௌரபுராணம் (கி.பி. 950-1050) (இயல் : 30)

இவையெல்லாம் தத்தம் சமயக் கருத்துக்களை விளக்க இராமகாதையைப் பயன்படுத்துகின்றன.

மேற்கண்ட புராணங்கள் தவிர வான்மீகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சில முழு இராமாயண நூல்களும் வடமொழியில் காணப்படுகின்றன

1. யோக வசிஷ்ட (அ) வசிஷ்ட இராமாயணம் (கி.பி. 8 (அ) 12)
2. அத்யாத்ம இராமாயணம் (கி.பி. 13) இராமசர்மர்
3. அற்புத இராமாயணம் (முந்தையதற்குப் பிற்பட்டது)
4. ஆனந்த இராமாயணம் (கி.பி. 15) வால்மீகி பெயரால் வழங்குகிறது.
5. புஷுண்டி இராமாயணம்

இவையன்றி இன்னும் பல்வேறு சிறுசிறு இராமாயண நூல்கள் வடமொழியில் கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரையில் தோன்றியுள்ளன. காளிதாசரின் இரகுவம்சம் முதலான பல இலக்கியங்கள் இராமசரிதையைப் பாடுபொருளாகப் பேசுதவதையும் காண்கிறோம். இவற்றுள் பெரும்புகழ் வாய்ந்தன:

1. காளிதாசர் : இரகுவம்சம் (கி.பி. 4)
2. பிரவரசேனர் : இராவணவகோ (அ) சேதுபந்தா (கி.பி. 550-600)
3. பட்டி : இராவணவதா (கி.பி. 500-650)
4. குமாரதாசர் : ஜானகி ஹரணா (கி.பி. 8)
5. அபிநந்தர் : இராமசரிதை (கி.பி. 9)
6. க்ஷேமேந்திரர் : (அ) இராமாயண மஞ்சரி (கி.பி. 11) (ஆ) தசாவதார சரிதை
7. சாகல்ய மல்லர் : உதார ராகவர் (கி.பி. 12)
8. சகர கவி : ஜானகி பரிணயம் (கி.பி. 17)
9. அத்வைத கவி : இராமலிங்காம்ருதம் (கி.பி. 17)
10. மோகனஸ்வாமி : இராம இரகசியம் (அ) இராமசரிதை (கி.பி. 1608)

இராமகாதை நாடக வடிவிலும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரை பல நூல்களாக வெளி வந்துள்ளது பாசர், பவபூதி, ஜெயதேவர் முதலான நாடகாசிரியர்கள் இதில் அடங்குவர்.

பௌத்த இராமாயணங்கள்

1. தசரத ஜாதகம் (பாலி. கி.மு. 5)
2. அனமகம் ஜாதகம் (பாலி, கி.மு. 5)
3. தசரத கதனம் (பாலி, கி.மு. 5)

ஜைன இராமாயணங்கள்

1. விமல சூரி : பௌம சரிதம் (பிராக்ருதம், கி.பி. 4)
2. சங்க தாசர் : வாசுதேவ ஹிண்டி (பிராக்ருதம், கி.பி. 5)
3. இரவி சேனர் : பத்ம புராணம் (சமஸ்கிருதம், கி.பி. 6)
4. குணபத்ரர் : உத்தர புராணம் (சமஸ்கிருதம் (கி.பி. 10)
5. சுயம்புதேவர் : பௌம சரிதம் (அபப்பிரம்சம், கி.பி.9)
6. சீலங்கர் : சௌபன்ன மகா புருஷ சரிதம் (பிராக்ருதம், கி.பி. 868)

7. பத்ரேசுவரர் : சுகாவலி (பிராக்ருதம் கி.பி. 11)

தமிழ்

கம்பன் : கம்பராமாயணம் (கி.பி. 9)

தெலுகு

1. கோன புத்தா ரெட்டி : ரங்கநாத ராமாயணம் (கி.பி. 13)
2. பாஸ்கரன் மற்றும் மூவர் : பாஸ்கர ராமாயணம் (கி.பி. 13)
3. ஆதுகூரி மொல்ல : மொல்ல ராமாயணம் (கி.பி. 15)

கன்னடம்

1. அபிநவ பம்பா என்னும் நாக சந்திரர் : பம்ப ராமாயணம் (கி.பி. 11)
2. குமார வான்மீகி என்னும் நரகரி : தொரவெ ராமாயணம் (கி.பி. 16)

மலையாளம்

1. கண்ணச இராம பணிக்கர் : கண்ணச ராமாயணம் (கி.பி. 14)
2. துஞ்சத்து எழுத்தச்சன் : அத்யாத்ம ராமாயணம் (கி.பி. 16)

இந்தி

1. கோஸ்வாமி துளசிதாஸ் : துளசி இராமாயணம் (கி.பி. 1574)
2. கேசவ தாஸ் : இராம சந்திரிகா (கி.பி. 18)

அசாமி

மாதவ் கந்தலி : அசாமி ராமாயணம் (கி.பி. 14)

வங்காளம்

கிருத்தி வாசன் : வங்காள ராமாயணம் (கி.பி. 15)

ஒரியா

பலராமதாஸ் : ஒரியா ராமாயணம் (கி.பி. 16)

மராத்தி

ஏகநாதர் : பாவார்த்த ராமாயணம் (கி.பி. 16)

நாட்டுப்புற இலக்கியங்கள்

தமிழ், மைதிலி, போஜ்புரி, வ்ரஜ, இந்தி, மற்றும் சில வட நாட்டு மக்களிலக்கியப் பாடல்கள்.

II நாட்டு நகர வருணனைகள்

காப்பிய மரபில் நாட்டு, நகர வருணனைகள் காணப்பெறுவது இயற்கையே யாயினும் தமிழ்க்காப்பிய மரபில் இத்தகைய வருணனைகளை வெறும் திணைவளம் சார்ந்தனவாக மட்டும் பாடாமல் ஒரு நாட்டு மக்களின் மனவளத்தை முன்னிறுத்தித் தனிமனித ஒழுக்கமும், உடையார் - இல்லார் என்ற வேறுபாடு இல்லாத சமதர்ம நோக்கமும் உடைய மக்கள் வாழ்ந்த நாடு என்று ஒரு குறிக்கோள் நாட்டையும், குறிக்கோள் சான்ற மக்கள் அமைப்பையும் கம்பன்தான் முதன் முதலில் படைத்துள்ளான் என்ற கருத்து பொதுவாகத் தமிழ் அறிஞர்களிடையே நிலவுகிறது. வான்மீகி மிகவும் சுருங்கிய நிலையில் ஒரிரு சுலோகங்களில் வருணித்த கோசல நாட்டையும், அயோத்தியையும், கம்பன் மிகப் பெரிய அளவில் விரித்து மானுட ஒழுக்கமும் சமுதாயச் சமதர்ம நோக்கமும் நிறைந்தனவாகக் குறிக்கோள் (Utopian) பார்வையில் படைத்துக் காட்டியுள்ளான் என்று கூறப்படுகிறது.

கம்பனின் உள்ளம் தனிமனித ஒழுக்க மேம்பாட்டை வற்புறுத்த விரும்பியது உண்மையே. இராமாவதாரத்தின் பாவிகமே அதுதான். இக்கருத்தமைந்த கம்பனின் கற்பனை,

ஆசலம் புரி ஐம்பொறி வாளியுங்
காசுஅலம்பும் முலையவர் கண்ணனும்
பூசல் அம்பும் நெறியின் புறம் செலாக்
கோசலம் புனை ஆற்றணி கூறுவாம்

(ஆற்றுப்படலம், 1)

என்னும் பாடலாக வெளிப்பட்டுள்ளது. இவ்வாறே கல்விச் சிறப்பு, பொருளாதாரச் சமத்துவம், வீரம், இல்லாரே இல்லாத இனிய சமுதாயம் போன்ற மானுடச் சமுதாயச் சிறப்புகளைக் கம்பன் வருணிப்பதாகக் கீழ்வரும் பாடல்களைக் காட்டலாம்.

வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
தீங்கவி செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்னயான் பேசல் உற்றேன்

(நாட்டுப் படலம், 1)

கூற்றம் இல்லைஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லைதம் சிந்தையின் செம்மையால்
ஆற்றல் நல்லறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது இழிதகவு இல்லையே

(நாட்டுப்படலம், 39)

வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைஓர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய்உனர இலாமையால்
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்

(நாட்டுப்படலம், 53)

கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லைமாதோ
(நகரப்படலம், 73)

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை ; உடையார்களும் இல்லை மாதோ
(நகரப்படலம், 74)

கம்பன் கழகப் பதிப்பப்படி மொத்தம் 156 விருத்தங்களில் கம்பன் கோசல நாட்டையும் அயோத்தி நகரத்தையும் கவிச்சுவை ததும்ப வருணிக்கிறான். எனினும், ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை என்று வான்மீகியைப்பற்றி கம்பனே கூற, நம் அறிஞர்கள் மூலநூல் ஓரிரண்டு சுலோகங்களால் மட்டும் கோசல நாட்டைக் குறிப்பிடுவதாகக் கூறுவானேன். கம்பன் கூறுவது சரியா, அறிஞர் கூற்று சரியா என்னும் வினா எழவே வான்மீகி இராமாயணத்தை அணுக நேரிட்டது.

வான்மீகியின் வருணனை

வான்மீகி கோசல நாட்டைப் பற்றிப் பாலகாண்டம் ஐந்தாம் சருக்கத்தில் ஒரே ஒரு சுலோகத்திலும், அயோத்தி நகரைப் பற்றி, ஐந்து, ஆறாம் சருக்கங்களில் 47 சுலோகங்களிலும் வருணிக்கிறார்.

இவையும் இனிவரும் வான்மீகப் பகுதிகளும் தர்மாலயா பதிப்பைப் பின்பற்றித் தரப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலனவும் ஏனைய மொழி இராமாயணங்களின் பகுதிகளும் இக் கட்டுரையாசிரியரால் மொழிபெயர்த்துத் தரப்படுகின்றன.

சருக்கம் ஐந்து

பல்வேறு வளங்களால் நிறைந்த தன தானியங்களை மிகுதியாக உடைய கோசலம் எனப் பெரும்புகழ் பெற்ற நாடொன்று சரயுவின் கரையில் நிறுவப்பட்டது (5.5)

அயோத்தியா என்ற உலகப்புகழ்பெற்ற நகரம் ஒன்று அங்கு இருந்தது. அது மானுடர்த் தலைவனான மனுவினால் படைக்கப்பட்டது. பத்தும் இரண்டும் ஆன யோசனைகள் நீண்டது. அப்பெரு நகரம் திருமகளின் இருப்பிடமாக இருந்தது. மூன்று யோசனை அகலமானது. நன்கு வகுக்கப்பட்ட பெரிய சாலைகளை உடையது. உதிர்ந்த மலர்களால் நிரம்பி எப்போதும் நீர் தெளிக்கப்பெற்ற அரசப் பெருந்தெருவை (இராச வீதி) உடையது (5,6,7,8)

பேரரசுகளைக் காக்கும் அரசனான தசரதன், தேவருலகைத் தேவேந்திரன் ஆளுவதுபோல அந்தப் பட்டணத்தை ஆண்டு வந்தான் (5.9)

அந்நகரம் புறவாயிற் பெருங்கதவை உடையது. நன்கு அமைக்கப்பட்ட பெருந்தெருக்களில் வணிகர்களின் கடைகள் அந்நகரின் நடுப்பகுதியில் இருந்தன.

பல்வேறு எந்திரங்களையும், ஆயுதங்களையும் சதக்னீ என்னும் பெயருடைய நூற்றுக்கணக்கான பீரங்கிகளையும் உடையதாக இருந்தது.

பல்வகைச் சித்திர வேலைக்காரர்களாலும், அரசரைத் துதித்துப் பாடும் சூதகர், குலமுறை புகழ்ந்து துயில்எழுப்பும் மாகதர், பெண்களுக்கு நடனம் பயிற்றும் நடர்கள் போன்றோராலும் நிறைந்த நகரம்; திருமகள் நீங்காத மீயுயர் மாளிகைகளின் மீது கொடிகளையுடைய நகரம்.

மலர்வனங்கள், இன்பப்பூக்கள் நிறைந்தது. ஒட்டியாணம் போன்ற மதில்களை உடையது [illegible] [illegible]ழமான

அகழியையும் அரிதின் முயன்றாலும் வேற்றோரால் புக முடியாத கோட்டையினையும் உடையது. (5:10-12)

குதிரைகள், யானைகள், பசுக்கள், ஒட்டகங்கள், கழுதைகள், கப்பம் கட்டுகின்ற சிற்றரசர்கள் பல்வேறு நாடுகளில் இருந்து வந்துள்ள வணிகர்கள் ஆகியோரின் கூட்டங்களால் நெருக்கப்பட்டுள்ள நகரம்.

பல்வகை இரத்தினங்களால் இழைத்துக் கட்டப்பட்ட, மலைபோன்று உயர்ந்த, பல அடுக்குகளை உடைய மாட மாளிகைகளால் நிறைந்த நகரம். இந்திரனின் அமராவதியைப்போல் சொக்கட்டான் கட்டம் போன்ற வியக்கத்தக்க வடிவில் அமைந்த நகரம். விமானங்களுக்கு ஒப்பான மாட மாளிகைகள் நல்லிலக்கணங்கள் பொருந்திய சிறந்த மாதர் குழாங்களால் நிறைந்து காணப்பட்டன (5; 13-16)

குற்றமற்ற சமநிலத்தே கட்டப்பெற்ற வீடுகளால் நெருக்கமாக அமைந்த நகரம்; செந்நெல் அரிசியால் நிறைந்தது; கருப்பஞ்சாறு போன்ற இனிய நீர் நிலைகளை உடையது. பேரிகை, மிருதங்கம், வீணை, மத்தளம் முதலியவற்றால் எழுப்பப்படும் இன்னோசைகள் நீங்காத நகரம்.

உத்தமவிலக்கணத்தால் அமைந்து, தேவலோகத்தில் உள்ள குபேரன், இந்திரன், இயமன், வருணன் முதலிய எவருடைய நகருக்கும் இல்லாத சிறப்புகளை உடையதாய், கைபுனைந்து இயற்றாக் கவினுடைய பிரம்மாவின் பட்டணம் கூட இதன் சிறப்பிற்கும் அழகிற்கும் ஒவ்வாது, என்று புகழப்பட்டதாய், சான்றோர்களால் நிறைந்து வாழத்தக்கதாய் அமைந்த நகரம் (5: 17-20)

துணைவலியற்றவனையும், மகப்பேறு அடையாத வனையும், சப்தத்தால் அறியத்தக்கவனையும், அதாவது கண்ணெதிரில் நில்லாதவனையும் புறம்காட்டிப் பயந்தோடு

கின்றவனையும் அம்பெய்து கொல்லும் வீரர்கள் அந் நகரத்தில் இல்லை.

காடுகளில் உள்ள தீங்கிழைக்கின்ற சிங்கம், புலி, பன்றி, முதலானவற்றை உடல்பலத்தாலும், ஆயுதங்களாலும் கொன்று அழிக்கின்ற பெருவீரர்களை ஆயிரக்கணக்காக உடையது.

வேதங்களையும், ஆறு வேதாங்கங்களையும் கற்றுத் துறை போய, சான்றாண்மை மிக்க, வாய்மை தவறாத முனிவர்களாலும் அவர்களுக்கு ஒப்பான உத்தம பிராமணர்களாலும் நிறைந்த அந்த நகரத்தை அப்போது தசரத மன்னன் ஆண்டு வந்தான் (5:21-24)

சருக்கம் ஆறு

அப்படிப்பட்ட சிறந்த நகரத்தில் மக்கள் எல்லோரும் அற நெஞ்சினர்; மகிழ்ச்சியோடு வாழ்பவர்கள் ; பற்பல கலைகளை அறிந்தவர்கள்; தத்தம் பொருள்களைக் கொண்டு மனநிறைவை அடைபவர்கள்; உலோபமற்றவர்கள்; உண்மையே பேசுபவர்கள். (1, 6:6)

அந்த நகரத்தில் குறைவுபட்ட செல்வர்கள் இல்லை; பசு, குதிரை, தன தான்யம் இல்லாதவன் இல்லை; பெறவியலாத பேறுகள் உடைய இல்லறத்தான் ஒருவனும் இல்லை. (எல்லாப் பேறுகளும் பெற்ற இல்லறத்தார் வாழும் நகரம் என்பது கருத்து) - (6:7)

பிறர்பொருளை வெஃகுபவனையோ, அற்ப குணமுள்ளவனையோ, அருவருப்பான தோற்றமுள்ள ஆணையோ அயோத்தியில் ஓரிடத்தும் பார்க்க இயலாது. சுற்றுப் புலமையடையாதவனில்லை; நாத்திகனும் இல்லை. (6:8)

குண்டலமில்லாதவன் இல்லை; மகுடமில்லாதவன் இல்லை; மழலை இல்லாதவன் இல்லை; போகமில்லாதவன் இல்லை; பரிசுத்தமற்றவன் இல்லை; வளமான உடலில்லாதவன் இல்லை; பரிமளமில்லாதவனும் இல்லை; (6:10)

வயிறார உண்ணாதவன் இல்லை; கொடுக்காதவன் இல்லை; தோள்வளையும், ஆரமும் அணியாதவன் இல்லை; மேலும் கைவளை இல்லாதவன் இல்லை; புலன்களை அடக்காதவனும் இல்லை; (6:11)

அயோத்தியில் நாளும் ஓமம் செய்யாதவன் இல்லை; யாகம் செய்யாதவன் இல்லை; அற்பனும் இல்லை; திருடன் இல்லை; வருண ஒழுக்கங்கள் தவிர்ந்து, சாதிமுறை தவறித் திருமணம் செய்பவனும் இல்லை. (6:12)

பிராமணர்கள் எப்போதும் தங்கள் கடமைகளைச் செய்வதில் ஆர்வமுடையவர்களாகவும், புலன்களைப் பொறிவழிச் செல்லாது அடக்குபவர்களாகவும், கல்வியிலும் கொடையிலும் ஈடுபடுதலைத் தம் இயற்கையாக உடையவர்களாகவும், கட்டுப்பாடு உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். (6:13)

அவனுடைய ஆட்சிக்காலத்தில் நாத்திகன் என்று ஒருவனும் இல்லை; பொய்பேசுபவன் இல்லை; பல்வேறு சாத்திரங்களை அறியாதவன் இல்லை; அழுக்காறு உடையவன் இல்லை; சத்தியற்றவன் இல்லை; புலமையில்லாதவனும் இல்லை. (6:14)

அங்கு ஆறு வேதாங்கங்களை அறியாதவன் ஒருவனாவது இல்லை; விரதமில்லாதவன் இல்லை; ஆயிரக்கணக்காகக் கொடாதவன் இல்லை; எளி வந்தவனும், தயக்க மனத்தையுடையவனும், வருத்த முடையவனும், பிணியில் வருந்துபவனும் இல்லை. (6:15)

கம்பராமாயணம், ஆற்றுப்படலம் (20), நாட்டுப் படலம் (61), நகரப்படலம் (75), என்னும் மூன்று படலங்களில் கோசல நாட்டையும் அயோத்தி நகரையும் வருணிக்கிறது. நானில வருணனைகள் ஆற்றுப் படலத்திலும், மக்களின் பொதுவாழ்க்கைச் சிறப்புகள் நாட்டுப்படலத்திலும், நகரத்தின் அமைப்பு, மதில், அகழி, மாட மாளிகைகள், மாந்தரின் ஆடல் பாடல்கள் போன்ற துய்ப்பு நிலைகள், செல்வம், கொடை, கல்வி, வீரம், அன்பு, கற்பு போன்ற வாழ்வியற் பண்புகள் ஆகியன நகரப் படலத்திலும் மிக விரிவாகக் கூறப்படுகின்றன.

தொகுப்புரை

வான்மீகி அயோத்தி நகரத்தை 47 சுலோகங்களில் வருணிக்கிறார். ஐந்தாம் சருக்கத்தில் நகரத்தின் இயற்கை அமைப்பு, பாதுகாப்புக் கருவிகள், தெருக்கள், மாட மாளிகைகள், மக்களின் பொது இயல்புகள் ஆகியவற்றை விளக்குகிறார்.. ஆறாம் சருக்கத்தில் மக்களின் சிறப்பியல்புகளைப் பலபட விரித்துரைக்கிறார். செல்வ வளம், சிந்தையின் நிறைவு, கல்வி, ஒழுக்கம், கருணை போன்ற பண்பு நலன்களை வருணிக்கிறார். அயோத்தி நகரம் ஒரு மகோன்னதமான வாழ்விடம்; அங்குள்ள மக்கள் பொருட் செல்வம், உடல்வளம், உள்ள வளம், ஒழுக்க வளம் போன்ற பன்முகச் சிறப்பினை உடையவர்களாக இருந்தனர் என்ற கருத்து வான்மீகத்தில் பெறப்படுகிறது.

கம்பன் 'ஆற்றுப் படலம்' என்ற ஒரு புதுப் பிரிவைத் தோற்றுவித்துத் தமிழ் மரபிற்கேற்ப நானில வருணனைகளைத் தருகின்றான். காப்பிய மரபில் இப்புதுமை கம்பனால் செய்யப்பட்டுள்ளது. நாட்டுப்படலம், நகரப்படலம் என்ற இரண்டு படலங்களும் அயோத்தி நகரின் செல்வ வளம், படை வளம், மக்களின் செம்மை சால் மன வளம், ஒழுக்கம் போன்றவற்றைப் பலபடக் கவிதை நயம் பொதுளக்

கூறுகின்றன. வான்மீகியின் வருணனை ஓரளவு கற்பனையுடன் இயல்பு நவிற்சியாக அமையக் கம்பனின் வருணனை கருத்துக் கற்பனை மிகுந்து உயர்வு நவிற்சியாக அமைந்திருக்கக் காண்கிறோம். இரு காப்பியங்களும் குறிக்கோள் உலகப் பார்வையினை உடையன எனினும், கம்பனின் குறிக்கோள் உலக நாகரிக முதிர்ச்சியையும் கவிதைச் சுவையின் சிகரத்தையும் எட்டி நிற்பதைக் காண்கிறோம்.

III இராமன் - சீதை களவு மணம்

இராமகாதையைத் தமிழில் செய்த கம்பன், ‘பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி’ என்னும் வழிநூல் மரபிற்கேற்பப் பல தமிழ்மரபுகளைத் தன் காப்பியத்துள் புகுத்துகிறான். இத்தகைய புதுமைகளுள் ஒன்றாக இராமன், சீதை இருவருக்குமிடையே தோன்றும் களவுக் காதலைக் கூறலாம். இச் செய்தியை மூல நூலும் பல்வேறு இராமாயணங்களும் எவ்வாறு கூறுகின்றன என்று சற்று விரிவாகக் காணலாம்.

‘முனிவரே, ஸ்ரீராமர் இந்த வில்லை நாணேற்றி விட்டால் அயோனிஜ புதல்வியாகிய சீதையை ஸ்ரீராமருக்குப் பாணிக்கிரகணம் செய்து தருவேன்’ என்றார் ஜனகர் (1, 66:27). விசுவாமித்திரர் ‘வில்லை ஸ்ரீராமருக்குக் காட்டும்’ என்றார். எட்டுச் சக்கர வண்டியில் ஏற்றப்பட்டு ஐயாயிரம் கிங்கரர்களால் இழுக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்ட வில்லைக் கண்டதும் விசுவாமித்திரர், குழந்தாய் ஸ்ரீராமா, வில்லைப் பார் என்றார். அவையிலிருந்த ஆயிரக்கணக் கானவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இராமர் வில்லைச் சிரமமின்றி விளையாட்டாகத் தூக்கி நாணேற்றி வளைத்து முறித்துவிட்டார். உடனே, ஜனகர் ‘சீதை இராமனுக்கு வீர்ய சுல்கமாகத் தரப்படுவாள்’ என்று அறிவித்தார். (1,67:1,4,12, 15,16,22). இவ்வாறு இருவகை வான்மீகங்களும் கூறுகின்றன. திருமணத்திற்குமுன் இராமர் - சீதை சந்திப்பு

நிகழ்வதாகக் காட்டவில்லை கன்னி காதானமாய் வீர்ய சுல்கமாக (வீரத்திற்குரிய பரிசாக) இராமனுக்குச் சீதை மனைவியாகிறாள்.

பௌத்த, ஜைன ராமாயணங்கள் இராமன்-சீதை திருமணம் குறித்துச் சிறப்பாக எதுவும் கூறவில்லை. நரசிம்ம புராணமும், பாகவத புராணமும் சீதையின் சுயம்வரம் பற்றிப் பொதுவாகக் கூறுகின்றன. வாசுதேவ ஹிண்டி, சுயம்வரத்தில் சீதையே இராமனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்தாள் என்று கூறுகிறது.[1] நீரில் இருந்து கண்டெடுத்த பெண்ணாகிய சீதையை இந்தியக் குடியானவர்கள் வளர்த்துப் பருவம் அடைந்ததும் தங்கள் நாட்டு இளவரசனாகிய இராமனுக்கு அளிக்க, இராமன் அவளைச் 'சீதா' என்று பெயரிட்டுத் தன் மனைவியாக ஏற்றுக் கொண்டான் என்று திபேத்திய ராமாயணம் கூறுகிறது.[2]

மிதிலையில் ஜனகனின் அரண்மனையை நோக்கி விசுவாமித்திர முனிவருடன் இலக்குவன் பின்தொடரச் சென்று கொண்டிருந்த இராமன் கன்னிமாடத்தே நின்றிருந்த சீதையைக் கண்டான்: அவளும் இராமனைக் கண்டாள்; இருவரும் ஒருவர் மீதொருவர் காதல் கொண்டனர் என்பதைக் கம்பன்,

வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர் (1. 10:37)

என்று கூறுகிறான். தமிழ்க் களவியல் நெறிக்கேற்ப இக்காட்சியினைக் கம்பன் தானே புதியதாய்ப் படைத்துச் சேர்க்கிறான். மேலும், பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ என்று அவ்விருவரும் இருந்த நிலையைக் குறிப்பிடுமிடத்து அவர்தம் அவதார நிலையைச் சுட்டுகிறான். இங்கு இது களவன்று. எனவே, அவதார நிலை, மானுட நிலை

இரண்டையும் தொடர்புறுத்திச் செல்லுவதாகக் கம்பனது காப்பியம் அமைந்துள்ளது.

தன்முன் வைக்கப்பெற்ற வில்லை இராமன் ஒரு மலர் மாலையைத் தூக்குவது போல எளிதாக எடுத்து அவையிலிருந்த அரசர்கள் 'என்ன ஆயிற்று' என அறியும் முன்னர் வளைத்து நாணேற்ற அவ்வில் ஊழிக் காலத்துப் பேரிடியென்னப் பெருஞ்சத்தத்துடன் முறிந்தது. ஜனகனும் தன் வாக்குப்படி சீதையை இராமனுக்கு மனைவியாகத் தர முடிவு செய்தான் என்று கம்பன் கூறுகின்றான்.

கி.பி. 8ஆம் நூற்றாண்டில் இயற்றபெற்ற பவபூதியின் மகாவீர சரிதம் என்னும் வடமொழி நாடகம், இராமனும் இலக்குவனும் சுயம்வரத்திற்கு முன் விசுவாமித்திர முனிவரின் ஆசிரமத்திலே சீதையையும், ஊர்மிளாவையும் முறையே சந்திக்கின்றனர் என்று கூறுகிறது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற ஜெயதேவரின் பிரசன்ன ராகவ என்னும் வடமொழி நாடகம், சுயம்வரத்திற்கு முன்னர் மிதிலையில் ஒரு உவவனத்தில் இராமனும், சீதையும் சந்தித்து மகிழ்ந்தனர் (அங்கம் II), என்று கூறுகிறது. மேலும், சுயம்வரத்திற்கு இராவணனும் வாணாசுரனும் வந்திருந்தனர் என்றும், வில்லை வளைக்க இயலாது தோற்றனர் என்றும் கூறுகிறது. அஸ்திமல்லர் என்பவரால் கி.பி. 1290இல் இயற்றப்பெற்ற மைதிலி கல்யாணம் என்னும் நாடகம் சுயம்வரத்திற்குமுன் காமதேவன் கோட்டத்திலும் (அங்கம் I) மாதவி வனத்திலும் (அங்கம் II) இராமனும், சீதையும் சந்தித்துக் காதல் கொண்டனர் என்று காட்டுகிறது.

துளசி ராமாயணத்தின்படி இராமனும் இலக்குவனும் மிதிலை நகரப் பூங்கா ஒன்றிற்கு வழிபாட்டிற்காக மலர்கொய்யச் செல்கின்றனர். பார்வதியை (பவானி) வழிபடுவதற்காகத் தன் தோழியருடன் அந்தப் பூங்காவிற்குச் சீதை வருகிறாள். அங்கே இராமனும் சீதையும்

ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்கின்றனர். அவர்கள் இருவரும் பழைய காதலர்கள் என்பதை யாரும் அறியார். கௌரி (பவானி) சீதையின் வழிபாட்டில் மகிழ்ந்து 'சீதையே, நீ விரும்பியவாறே கரிய செம்மலானவன் நின் கணவனாவான்' என்று வாழ்த்தியது. (I.235 Chandam). பூங்காவிலிருந்து திரும்பிய இராமலக்குவர் தாம் சீதையைக் கண்டது பற்றி விசுவாமித்திரரிடம் கூறினர். அவரும் 'நீங்கள் விரும்பியவாறே நடக்கும்' என்று வாழ்த்தினார். (I. 236:2)

சுயம்வரத்தின்போது, சனகன் வில்லைக் கொண்டுவந்து வைத்து 'இதை வளைத்து நாணேற்று பவர்க்குச் சீதை மனைவியாவாள்' என்று அறிவிக்கிறான். இராவணன், வாணாசுரன் போன்ற பெரு வீரர்கள் பலரும் பலமுறை முயன்றும் அந்த வில்லை அசைக்கவும் முடியாமல் அவமானப்பட்டு வெளியேறுகின்றனர். சனகனால் சுயம்வர மண்டபத்தில் வரவழைக்கப்பட்ட சீதை இந்நிகழ்ச்சிகளில் மனம் செலுத்தாமல் இராமனையே நினைந்த வண்ணம் தன் தோழியருடன் அமர்ந்திருந்தாள். பலரும் முயன்று தோற்றபின் சனகன், 'இந்த வில்லை வளைக்கும் ஆற்றலுடைய அரச குமாரர்கள் நம் நாட்டில் எவருமே இல்லையா?' சீதை கன்னியாகவே இருக்க வேண்டியவள்தானா என மனமுடைந்து பேசுகிறான். இதைக் கேட்டு வெகுண்ட இலக்குவன் மிகவும் சினமுற்று, விசுவாமித்திரரையும் இராமனையும் வணங்கி, 'இந்த வில்லை இப்போதே ஒரு கணத்தில் தூக்கி மண்சாடியை உடைப்பது போல் சிதறடிக்கிறேன்; மேரு மலையையே நான் ஒரு முள்ளங்கி போல நசுக்கிவிடுவேன். இந்தப் பழைய வில் எம்மாத்திரம்? நீங்கள் அனுமதியளித்தால் ஒரு காளானை நசுக்குவதுபோல் இதை ஒடித்துவிடுகிறேன்' என்று கூறுகிறான். இதைக் கேட்டு உள்ளுக்குள் மகிழ்ந்த இராமன் இலக்குவனை அழைத்து உட்காரச் செய்துவிட்டு விசுவாமித்திரரை நோக்க, அவரும்

நல்ல முகூர்த்த நேரம் வந்ததை உணர்ந்து, 'இராமா எழு, சிவதனுசை உடைத்துச் சனகனின் மனக் குறையைத் தீர்' என்றார். இராமன் வில்லை நோக்கிச் செல்வதைக் கண்ட சீதை, சிவனையும் பார்வதியையும் மனத்துள் துதித்து, 'நான் இதுவரை செய்த வழிபாடுகளின் பலனாக இந்த வில்லின் கனத்தைக் குறைத்து இராமன் எடுப்பதற்கேற்றவாறு அருளுக' என்று வேண்டுகிறாள். தன் குருவை மனத்துள் வணங்கி இராமன் அந்த வில்லை எளிதாக எடுத்தான். வில்லுடன் நின்ற இராமனை எல்லோரும் ஒரு கணம் பார்த்து முடிப்பதற்குள் இராமன் அதை வளைத்து நாணேற்றி இரண்டாக முறித்து விட்டான். வில்லொடிந்த ஒலி உலகங்கள் எல்லாவற்றையும் அதிரச் செய்தது. சீதை தோழிகள் புடை சூழ வந்து இராமனுக்கு வெற்றிமாலை சூடினாள்.[3]

கி.பி. 1772-73 ஆம் ஆண்டில் பிரதி செய்யப்பெற்ற துளசி ராமாயணம் பல விளக்கப்படங்களுடன் காணப்படுகிறது. இங்கிலாந்திலிருந்து பெறப்பட்ட நல்ல தாளில் பல்வேறு வண்ணங்களில் இப்படங்கள் எழுதப் பட்டுள்ளன. இதில் ஒரு படம் (9.6) இக்காட்சியை விளக்குகிறது.

தன்மகள் பருவமடைந்ததும் வில்வளைப்பு சுயம்வர நிகழ்ச்சிக்கு ஜனகன் எல்லா அரசர்கட்கும் – இராவணன், பரசுராமன் உட்பட - அழைப்பு அனுப்புகிறான். அவர்களுள் இராவணன் மட்டுமே அந்த வில்லைத் தூக்குகிறான்; ஆனால் வளைத்து நாணேற்ற முடியவில்லை; இருப்பினும் சீதையை மணம் முடித்துத் தருமாறு ஜனகனை வற்புறுத்துகிறான். இந்த நிலையில் இராமலக்குவர்கள் முனிவருடன் அங்கு வருகின்றனர். இராமன் வில்லை வளைத்து நாணேற்றிச் சீதையை மணக்கிறான் என்று கி.பி. 17ஆம் நூற்றாண்டில் எழுத்து வடிவம் பெற்ற இராம வத்து (Rama Vatthu) என்னும் பர்மிய ராமாயணம் கூறுகிறது.[4]

தாய்லாந்து ராமாயணமாகிய ராம்கியேன் (18ஆம் நூற்றாண்டு) மிதிலை நகருள் முனிவருடனும் இலக்குவனுடனும் சென்று கொண்டிருந்த இராமன் அரண்மனை ஜன்னல்களின் அலங்காரத்தைக் கண்டு வியந்தவனாய் நடந்தான். அப்போது சாளரத்தின் வழியே பார்த்துக் கொண்டிருந்த சீதையைக் கண்டு இருவரும் காதல் கொண்டனர் என்று கூறுகிறது. இதுவரை கட்டுக்குள் அடங்கியிருந்த சீதையாகிய இலக்குமியின் காதல் இராமனாகிய திருமாலைக் கண்டதும் வெளிப்படையாகப் பொங்கி வழிந்தது. என்கிறார், இதன் ஆசிரியர். சுயம்வரத்திற்கு முன்னரே நடந்ததாக இதனை ராம்கியேன் குறிப்பிடுகிறது.[5]

கி.பி. 18 அல்லது 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய லாவோசிய ராமாயணங்களில் பிரா லக் பிரா லாம் (Phra Lak Phra Lam) என்னும் இராமாயணம், சீதை - இராமன் களவுமணம் பற்றிப் பேசவில்லை. ஆனால் லாவோசின் இரண்டாவது சிறந்த இராமாயணமாகிய கவாய் துவாரபி (The Khvai Thuaraphi or Guay Dvarahbi) திருமணத்திற்கு முன்னர் நிகழ்ந்த இராமன்-சீதை சந்திப்பை மிக விரிவாகக் கூறுகிறது. இதன்படி தம் கல்வியை முடித்துவிட்டு இராம லக்குவர்கள் அயோத்தி திரும்பும் வழியில் காசப்ப முனிவரின் ஆசிரமத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கான வீரர்கள் குழுமி இருக்கக் கண்டு அதற்கான காரணத்தை அறிந்து வருமாறு இராமன் இலக்குவனை அனுப்ப இலக்குவன் முனிவரின் இருப்பிடம் சென்று நிகழ்ச்சிக்குக் காரணமாகிய வில்லைப் பார்த்துவிட்டுவந்து இராமனிடம் கூற, இராமலக்குவர் இருவரும் அம்முனிவரின் ஆசிரமம் நோக்கி நடக்கின்றனர். அப்போது தன் அரண்மனைச் சாளரத்தின் பக்கமாக வரும் இராமனைக் கண்ட சீதை உடனே இராமன் மீது காதலுற்று மயங்கி விழுகிறாள். காதலுணர்வு மீதூரப் பெற்ற சீதை, மருள் வந்தவள் போல விதிர்விதிர்த்து நடுங்கிச் சாய்ந்தாள்

என்று சீதையின் காதல் நோயைப் பற்றி இந்நூல் விளக்கமாக உரக்கிறது.[6]

வீட்டைச் சுத்தம் செய்வதற்காகப் பெருக்கிக் கொண்டே வந்த சீதை அங்கே வைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய வில்லைத் தன் இடக்கையால் தூக்கி, அந்த இடத்தைச் சுத்தம் செய்ததும் மீண்டும் அங்கே வைத்து விடுகிறாள். இதைக் கண்ட ஜனகன் பெரிதும் ஆச்சரியப்பட்டு, 'இவள் சக்தியின் அவதாரமே ஆவாள். இந்த வில்லைத் தூக்கி வளைப்பவனுக்குத் தான் இவள் மனைவியாவாள்' என்று முடிவு செய்கிறான் என்று விரஜ மொழி நாட்டுப்பாடல் கூறுகிறது. வில் வளைப்பு விழாவின் போது இராமன் வில்லை நோக்கிவர, சீதை வில்லின் கனத்தைக் குறைக்குமாறு பார்வதியைப் பிரார்த்தித்தாள் என்று புலந்தஷகர் நாட்டுப் பாடல் ஒன்று கூறுகிறது.[7]

திருமணத்திற்கு முன்னர்ச் சீதை தன் தந்தையின் தோட்டத்திற்குச் செல்கிறாள். அப்போது அங்கே வந்த இராமன் அவளை அள்ளி எடுத்துக்கொள்கிறான். 'என் தங்க நிறமான வளையல்கள் நொறுங்கிவிட்டால் தாய்க்கு என்ன சொல்வது? என்னை இவ்வாறு செய்யாதே. என் கையை விட்டுவிடு' என்று கூறி விடுபட்ட சீதை வீடு சென்றதும் அவனை நினைத்து மனக்கலக்கம் அடைகிறாள். கலக்கத்திற்குக் கராணம் கேட்ட தாயை நோக்கி, 'அம்மா, நான் சொன்னால் கோபிப்பாய், திட்டுவாய், வீட்டை விட்டே துரத்தி விடுவாய். நம் தோட்டத்தில் நான் இராமனைச் சந்தித்தேன். அவன் என்னை எடுத்து மார்புறத் தழுவிக்கொண்டான்' என்றாள். உடனே அவளுடைய தாய், 'மகளே, நான் உன்னைக் கோபிக்க மாட்டேன், திட்டமாட்டேன், வீட்டை விட்டு வெளியே அனுப்பமாட்டேன் இராமன்தான் உனக்கு ஏற்ற கணவன். உன்னை அவனுக்கே மணம் முடிப்போம். என்று கூறி அன்புடன் தன் மகளை அணைத்துக் கொண்டாள் என்று

மைதிலி மொழி நாட்டுப்புறத் திருமணப்பாடல் ஒன்று கூறுகிறது.

IV கிரக நிலைகள்

இராமன் முதலானோர் பிறந்தபோது இருந்த கிரகநிலைகளைப் பற்றி வான்மீகி இராமாயணம் தெளிவாகக் கூறுகிறது.

'சித்திரைமாதம் வளர்பிறையில் நவமி
திதியில் ஐந்து கிரகங்கள் உச்சத்தில்
இருக்கும்போது கர்க்கடக லக்கினத்தில்
இராமன் பிறந்தான்' (I. 18:9,10)

என்று வான்மீகி விளக்கமாகக் கூறுகிறார். கம்பனும் தன்னுடைய இராமாவதாரத்தில்,

வேய்புனர் பூசமும் விண்ணுள்ளோர்களும்
தூய கற்கடகமும் எழுந்து துள்ளவே . . .
அருமறைக்கு உணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகிற் கொழுந்து எழில்காட்டும் சோதியை
திருஉறப் பயந்தனள் திறம்கொள் கோசலை(5,101, 103).

என்று இராமன் பிறந்தபோது இருந்த கிரக நிலைகளைத் தொன்மக் குறிப்புடன் கூறுகிறான். மேலும்,

பூசமும் மீனும் பொலிய நல்கினாள்
மாசறு கேகயன் மாது மைந்தனை (104)

என்று பரதன் பிறந்தபோது இருந்த கிரக நிலையையும்,

அளைபுகும் அரவினோடு அலவன் வாழ்வுற
இளையவற் பயந்தனள் இளைய மென்கொடி (105)
மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட
விடங்கிளர் விழியினாள் மீட்டும் ஈன்றனள் (106)

என்று சத்துருக்கனனும் இலக்குவனும் பிறந்தபோது இருந்த கிரக நிலைகளையும் கம்பன் விளக்கமாகக் கூறுகிறான்.

தெலுகு மொழியில் எழுந்த பாஸ்கர ராமாயணமும் இந்தியில் எழுதப்பட்ட துளசி ராமாயணமும் இவ்வாறே நால்வர் பிறப்புக்கும் உரிய கிரக நிலைகளைச் சுட்டுகின்றன.

ஆனால் சில முக்கியமான இராமாயணப் பதிப்புகளில் இதைப்பற்றிய செய்திகள் காணப்பெறவில்லை உதாரணமாகப் பரோடா பல்கலைக்கழகத் திறனாய்வுப் பதிப்பாகிய வான்மீகி இராமாயனத்தில் இச்செய்தி இடம் பெறவில்லை.

வான்மீகி இராமாயணம் இருவகை வழக்குகளை உடையதாக அறிஞர்களால் ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முதலாவது, வடபுல வழக்கு; இரண்டாவது, தென்புல வழக்கு. இந்த இருவகைகளில் தென்புல வழக்கு வான்மீகி ராமாயணத்தில் மட்டுமே இவ்வாறு கிரக நிலைகள் சுட்டப்பெறுகின்றன என்றும், வடபுல வழக்கு வான்மீக ஏடுகளில் இச்செய்திகள் காணப்பெறவில்லை என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.[8]

ஆரியபட்டர் என்னும் புகழ்பெற்ற வானியல் அறிஞரும், வராகமிஹிரர் என்னும் புகழ் பெற்ற சோதிடநூல் வல்லுநரும் தோன்றிய வடபுலப் பண்பாட்டைச் சார்ந்த வான்மீக ஏடுகளில் கிரகநிலைகள் சுட்டப் பெறவில்லை என்பதும், நாளையும் கோளையும் மறுத்துக் கோளறு பதிகம் பாடிய தென்புலப் பண்பாட்டைச் சார்ந்து வழங்கிவரும் வான்மீக ஏடுகளில் இவை சுட்டப் பெறுகின்றன அல்லது இடைச் செருகலாகப் புகுத்தப்பெற்றுள்ளன என்பதும் வியப்பூட்டுவனவாக உள்ளன. எனவே இக்கருத்து மேலும் ஆழமாகச் சிந்திக்கத் தக்கதாக அமைகிறது.

V அகலிகை சாபநீக்கம்

வான்மீகம்

விசுவாமித்திரர் இராம இலக்குவர்களுக்கு அகலிகையின் சாப வரலாற்றை உரைக்கிறார்.

ஒரு நாள் கௌதமர் அங்கிருந்து (ஆசிரமத்திலிருந்து) தூரமாகச் சென்றிருந்தபோது, அச்செவ்வியை அறிந்த இந்திரன், அங்கு வந்து அகலிகையை நோக்கி, 'இடையழகியே, காம வயப்பட்டவர்கள், பெண்களின் கலவிக்கேற்ற சமயத்துக்காகக் காத்திரார்; நான் உன்னை அடைய விரும்புகிறேன்' என்றான். கௌதம வேடம் பூண்டு வந்தவன் இந்திரன் என அறிந்தே அந்த துர்ப்புத்தியுடைவள், 'தேவர்களின் அரசனே தன்னை விரும்பி வந்துள்ளான்' என்று பெருமிதம் எய்தியவளாய் அவன் விருப்பத்திற்கு ஆட்பட்டாள். பின்னர் மகிழ்ந்த உள்ளத்தளாய் வானவரேறே, மிகவும் தன்யளானேன், மானத்தைக் காப்பவரே, உம்மையும் என்னையும் வெளிப்படாமல் காத்துக்கொள்வீராக; இங்கிருந்து விரைந்து செல்லுவீராக, என வேண்டினாள். இந்திரனும் சிரித்தவாறே 'அழகிய ஜகனமுடையாய் மிகவும் திருப்தியடைந்தவனாக, வந்த வழியே திரும்பிச் செல்கிறேன்' எனக் கூறி வெளியே வந்தவன், ஆசிரமம் நோக்கி நீராடி வரும் கௌதம முனிவரைக் கண்டதும் நடுங்கித் தலை குனிந்தான். ரிஷி வேடந்தாங்கியவனை இன்னாரென உணர்ந்த கௌதமன் வெகுண்டு 'தீய சிந்தையுள்ளவனே, என் உருவம் எடுத்துச் செய்யத் தகாததைச் செய்த நீ விருட்சணங்கள் இழந்தவனாவாய்' எனச் சபித்தான். பின்னர் அகலிகையை நோக்கி, 'நீ ஆயிரமாண்டுகளாக இங்கேயே

கல்லாய்ச் சமைந்து, காற்றையே ஆகாரமாக உட்கொண்டு, உள்ளத் தவிப்புடன், புழுதி மூடி, எவ்வுயிருக்கும் புலப் படாதவளாய்க் கிடப்பாயாக. எக்காலத்தே தசரத இராமன் இந்தக் காட்டிற்கு வருகிறாரோ அப்போது தூய்மையடைந்து, அவருக்கு அதிதி பூசையியற்றி அறந்துறந்த ஆசையை ஒழித்துக் கண்மூடித்தனம் நீங்கி, உன் சொந்த வடிவம் பெற்று, என்னை வந்தடைவாய்' எனக் கௌதமன் சபித்தான். பின்னர் இந்திரன் சாபத்தால் நொந்து மீண்ட வரலாற்றை விரிவாக உரைத்து, இராமனை நோக்கி விசுவாமித்திரர்; 'இராம, இத்தகைய முனிவரின் ஆசிரமத்திற்குள் வந்து அகலிகையைச் சாபக் கொடுமையினின்று மீட்பாயாக' என்றார். மூவரும் ஆசிரமத்துள் நுழைந்ததும், அதுவரை யாருக்கும் புலப்படாமல் இருந்த அகலிகை அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டாள். அப்போது இராமலக்குவர்கள் இருவரும் அவள் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். கௌதமர் கூற்றை நினைவுகூர்ந்த அகலிகை அவர்கட்கு அதிதி பூசை செய்து மகிழ்வித்தாள். அப்போது அங்கு வந்த கௌதமரின் ஆசியையும், மரியாதையுடன் கூடிய உபசரிப்பையும் பெற்று மகிழ்ந்தவர்களாய் மூவரும் மிதிலை நோக்கிச் சென்றனர்.

பௌத்த ஜைன ராமாயணங்கள் அகலிகை வரலாற்றை முற்றிலுமாக ஒதுக்கிவிட்டன.

கம்பன் காப்பியப்படி, மிதிலை நோக்கி மூவரும் சென்று கொண்டிருக்கையில் ஓராசிரமத்துக்குள் நுழைகிறார்கள். அப்போது இராமனின் திருப்பாதத் துகள்பட்டு வழியில் கிடந்த ஒரு கல் பெண்ணுருவாக மாறி, வழியின் ஒரு புறத்தே ஒதுங்கி நின்றாள். இதைக் கண்டு பெரிதும் வியப்பெய்திய இராமனை நோக்கி விசுவாமித்திரன் 'இவள் அகலிகை, கௌதம முனிவரின் மனைவி' என்றான். அதனைக் கேட்ட இராமன், 'என்னே இவ் உலக இயற்கை! அன்னை போல்வாளுக்கு இத்துன்பம் ஊழ்வினையால் நேர்ந்ததா, அன்றி இம்மைக் குற்றங்களால் நேர்ந்ததா?' என்று

வினவினான். அப்போது இந்திரனால் குற்றப்பட்ட வரலாற்றையும், அதனால் இருவரும் கௌதம னால் சபிக்கப்பெற்ற வரலாற்றையும் விசுவாமித்திரன் விளங்கக்கூறினான். அதனைக்கேட்டு உலகியல் உணர்ந்த இராமன், 'அன்னையே, சென்றது குறித்து வருந்தல் வேண்டா; மாதவன் கருணைக்குப் பாத்திரமாகும் வண்ணம் நடந்து கொள்வாயாக. போய் வருக' என்று அருளலும் அகலிகை அவனை வணங்கிக் கௌதமனிருப்பிடம் நோக்கிச் சென்றாள். (I.9:14-25)

தெலுகு இராமாயணங்கள் மூன்றிலும் வான்மீகத்தைப் போலவே அகலிகை வரலாறு கூறப்படுகிறது. மூன்றிலும் இந்திரன் சேவல் வடிவம் கொண்டு பொய்யாகப் பொழுது புலர்தலைக் காட்டிக் கௌதமன் காலைக்கடன்களுக்காக வெளியே செல்லுமாறு செய்கிறான்.

நீவு இந்துருடு அவுட்ட எருகுதுகாமே இந்து ரம்மனு ஜல
ஜாக்ஷி தமபர்னசால லோபலகி பலபேதி கொனி போயி
பரக கிரீடிஞ்செ.. கௌதமுடு அந்தலோ வச்சி . . . படதி
பாஷாணமய் படியுண்டு மீவு.

என்று இந்திரனென அறிந்தே அகலிகை அவனை வரவேற்றுப் பன்னக சாலைக்குள் அழைத்துச் சென்று மகிழ்வித்தாளெனவும் பின்னர்க் கௌதமனால் கல்லாகச் சபிக்கப்பெற்றாள் எனவும் ரங்கநாத இராமாயணம் கூறுகிறது.

பாஸ்கர ராமாயணமும் ஏறக்குறைய இதே போன்று கீழ்க்காணுமாறு அகலிகையின் குற்றத்தை விளக்குகிறது.

('அன்றைக்கு அகல்யா இந்திரனே என்மீது விருப்பம் கொண்டு கௌதம வேடம் கொண்டு வந்துள்ளான் என மனத்துள் உணர்ந்து கொண்டு புன்முறுவலுடன் இங்கே சீக்கிரம் வாருங்கள் என அழைத்து அவனை மகிழ்வித்துத்

தானும் மகிழ்ந்து என்னையும் தங்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று கூறினாள்.')

அனுடு அகல்யா இந்துருண்டு பிரியம்புன கௌதமவேஷி ஜனவாடனி மதிலோயெறிங்கி முகமந்தங்க இக்கடரம்மு க்ரக் குனன் மனசிஜூ நம்முலம் துனிசெமானமு சிக்கின மன்ம துடம்வைநனு ரதிசாதுரிம் கவிசி நன்னுனு நின்னுனு காவு நாவுடுன் (பால: பாடல் 521)

தன் கருத்தை முற்றுவித்துக் கொண்ட இந்திரன் அஞ்சி வெளியேறுகையில் எதிர்ப்பட்ட கௌதமனால் ஆண்மையிழக்குமாறு சபிக்கப்படுகிறான்; அகலிகை கல்லாகச்சபிக்கப்படுகிறாள்.

அகலிகையின் சாப நீக்கத்திற்குப் பின்னர் இராமலக்குவர்கள் அகலிகையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். அவள் இராமனுக்கு அதிதி பூசை செய்கிறாள். அப்போது அங்கு வந்த கௌதமர் அகலிகையை அழைத்துச்செல்கிறார். இராமன் முதலானோர் மிதிலை நோக்கிச் செல்கின்றனர்.

மிதிலை செல்லும் வழியில் ஒரு கல்லின்மீது இராமனின் பாதம் பட்டதும் அக்கல்லில் இருந்து ஓர் அழகிய பெண் தோன்றினாள். அதனைக் கண்ட விசுவாமித்திரன் 'உன் பாதத்தூளியால் இக்கல் பெண்ணுருவம் பெற்றது' என்று கூறி அந்த அழகிய பெண்ணின் வரலாற்றைக் கூறிக்கொண்டே மிதிலையை நோக்கிச் சென்றான் (பால : 61 - 64) எனச் சுருக்கமாக மொல்ல ராமாயணம் அகலிகை வரலாற்றை உரைக்கிறது.

கன்னட பம்ப ராமாயணம் அகலிகை வரலாற்றை உரைக்கவில்லை. தொரவெ இராமாயணம் பின்வருமாறு கூறுகிறது:

'களையிழந்து காணப்பட்ட கௌதம வனத்தைக் கண்டு அதன் காரணத்தை வினவிய இராமனுக்கு விசுவாமித்திரன், அகலிகையின் மீது மோகம்கொண்ட இந்திரன் கௌதமனின் ஆசிரமத்துக்குள் வந்து அவளுடன் கூடியிருக்கையில் வெளியில் இருந்து வந்த கௌதமன் அதைக்கண்டு வெகுண்டு உடல்முழுதும் பெண்குறியாகுமாறு இந்திரனைச் சபித்தான். மேலும் இந்திரன் ஆண்மை இழந்தான். அகலிகை கல்லாகச் சபிக்கப் பெற்றாள். அது நிகழ்ந்தவிடம் இதுதான்' என்று விளக்குகிறான். அப்போது இராமனின் பாதத்துளி பட்டதும் ஒரு கல்லின் நடுவிலிருந்து அகலிகை தோன்றுகிறாள். இராமனைக் கண்டு வணங்கிப் புகழ்கிறாள். இதனைக் கண்டு அதிசயித்த இராமனுக்கு நான் முன்பு கூறிய அகலிகை இவள்தான். நின் அருட்பார்வையால் மீண்டும் தன்னுருவினை அடைந்தாள் என்று விசுவாமித்திரன் விளக்கம் தருகிறான். அப்போது அங்கு வந்த கௌதமன் இராமனைக் கண்டு அவதாரம் என உணர்ந்து வணங்குகிறான். அவனையும் அகலிகையையும் வாழ்த்தி மூவரும் மிதிலை நோக்கி செல்லலாயினர் (1 12: 17 -23)

துளசி ராமாயணம் சாபவிமோசனம்மட்டும் கூறுகிறது. சாபம் பெற்ற வரலாற்றைக் கூறவில்லை.

'கல்லாகச் சபிக்கப்பெற்ற கௌதமனின் மனைவி நின்பாதத் தூளிக்காகக் காத்திருக்கிறாள். அருள்கூர்ந்து விமோசனம் செய்க.' (தோகா-210)

பழைய உருப் பெற்றதும் அகலிகை இராமனைக் கைகூப்பி வணங்குகிறாள். மகிழ்ச்சிப் பரவசத்தால் பேச நா எழாது இராமனின் பாதங்களைப் பற்றிக்கொண்டு கண்ணீர் உகுக்கிறாள். பின்னர் ஒருவாறு தெளிந்து 'இரகு நந்தன, மெய்யுணர்வு பெற்றோர் மட்டுமே காணக்கூடிய உன்னை, தூய்மை இழந்த பெண்ணாகிய நானும் காணப்பெற்றேன். இப்பேற்றிற்குக் காரணமாகிய என் கணவரை வணங்குகிறேன்

என்றும் உன் திருப்பாதங்களை விட்டு நீங்காத வரம் அளித்தருள்வாயாக என்று வேண்டி அவ்வாறே வரம் பெற்று, மீண்டும் அவனிருதாள் வணங்கி மிக்க மன மகிழ்ச்சியோடு தன் கணவரின் ஆசிரமம் புக்காள். (சந்தம் 1-4)

தமிழ் வில்லுப்பாட்டு

வாராரே மூன்று பேரும்
அதலிகா வனமதிலே
அவசரமாய் வாரபோது
கருங்கல்லின் மேலேயல்லோ
கார்வண்ணன் பாதம் பட்டிடுமாம்
அந்தக் கல்லுமொரு பெண்ணாகி
கார்வண்ணனை வணங்கிடுவாள்
அதை யறிந்தார் மாயபிரான்

'சுவாமி, உலகிலுள்ள மானிடர்கள் கால்பாதம் ஒரு கல்லில் பட்டால் ரத்தம் கசிந்துவரும். இங்கு என் பாதமானது இந்தக் கல்லில் படவும் இந்தக் கல் பெண்ணாகி என்னை வணங்கக் காரணம் என்ன என்று எம்பெருமான் கேட்டபோது, இராமா இதுவெல்லாம் உன் மகிமையல்லாமல் வேறு ஒன்றும் கிடையாது. அதாவது, இந்தப் பெண் கௌதமருடைய தேவி, இவள் பெயர் தான் அகலிகை. இவள் கௌதமருக்குச் செய்த குற்றத்திற்காக வேண்டி இந்தப் பெண்ணைக் கௌதமர் கல்லாகச் சாபமிட்டார்.

எந்தனுட சாபமது
எப்போது நிவர்த்தி யாகும்
அதலிகையாள் கேட்டபோது
. . . . . வந்திடுவார் மூன்றுபேரும்
அந்த நல்ல சமயத்திலே
அச்சுதனார் திருப்பாதம்
கல்லதிலே பட்டபோது
கல்லும் பெண்ணாய் மாறிடுமாம்.

என்று கௌதம மகாமுனிவர் சொன்ன வாக்கின்படி, ராமா, உன் பாதம் பட்டவுடன் கல்லும் பெண்ணாக மாறிவிட்டது என்று விசுவாமித்திரர் விளக்கினார். அப்போது இராமன், சுவாமி அப்படியானால் இந்த அதலிகை என்ற பெண்ணைக் கௌதம மகாமுனிவரிடம் கூட்டிக் கொண்டுபோய் ஒப்படைத்துவிட்டுதான் போகவேண்டும்[10] என்று சொல்லவும், அப்படியே அவர்கள் அதலிகையை ஒப்படைத்துவிட்டு மேலே சென்றார்கள்

தொகுப்புரை :

அகலிகை வரலாறு குறித்துப் பல்வேறு இராமாயணங்கள் கூறுவதைக் கீழ்வரும் தலைப்புகளில் தொகுத்து ஆராயலாம்.

1. அகலிகை வரலாறு கூறும் நூல்கள் ; கூறாதன.
2. சாபவிமோசனத்துக்கு முன் வரலாறு உரைப்பன பின்னர் உரைப்பன.
3. சாப வரலாறு கூறுமிடத்து, அகலிகை இந்திரனை அறிதலும் அறியாமையும்
4. சாப-விமோசன முறைகளில் வேறுபடல்,

அகலிகை வரலாறு கூறுவன / கூறாதன.

வான்மீகம், இரகுவம்சம், நரசிம்ம புராணம், கம்ப ராமாயணம், தெலுகு ராமாயணங்கள், கன்னட தொரவெ ராமாயணம், எழுத்தச்சன் ராமாயணம், துளசி ராமாயணம், தமிழ் நாட்டுப்புறப் பாடல் ஆகியன அகலிகை வரலாற்றை உரைக்கின்றன. தசரத ஜாதகம், விமல சூரியின் பௌமசரிதம், வாசுதேவஹிண்டி, குணபத்ரரின் உத்தரபுராணம், கன்னட பம்பராமாயணம் ஆகியன அகலிகை வரலாற்றை முற்றிலுமாக ஒதுக்கி விடுகின்றன. ஒழுக்கத்தின் இழிந்த வரலாறொன்றைக் கூறி அத்தகையவர்க்குக் குறிக்கோள் தலைவனாகத் தாங்கள் படைக்கும் இராமன் அருள்செய்வதாக வரும் நிகழ்ச்சியைப் பௌத்த சமண சமயங்கள்

விரும்பாமையே இதற்குக் காரணமாகலாம். மேலும் ஒழுக்கம் தவறித் திருந்திய அத்தகைய பெண்களை இவை படைத்துக்காட்ட முன்வருவதில்லை. இதற்கும் இச் சமயங்களின் தத்துவப் பார்வை காரணமாக அமைகிறது எனலாம்.

அகலிகை வரலாறு உரைக்கப் போந்த நூல்களிலும் துளசி ராமாயணமும், தமிழ் நாட்டுப்புறப் பாடலும் அகலிகை சாபம் பெற்றதை மட்டும் குறிப்பிடுகின்றன. அதற்கான காரணத்தைக் கூறாது விடுகின்றன. சாபத்திற்குக் காரணமான நிகழ்ச்சியைப் படைத்துக் காட்டுவதை இந்நூல்கள் விரும்பவில்லைபோலும்.

சாப விமோசனத்துக்கு முன் / பின்

இனி அகலிகை வரலாற்றை, முழுமையாகவோ, பகுதியாகவோ உரைப்பதிலும்கூட வேறுபாடுகள் காணப்படுகின்றன. வான்மீகம், இரகுவம்சம், தெலுகு ராமாயணங்களில் ரங்கநாதம், பாஸ்கரம், கன்னட தொரவெ ராமாயணம், துளசி ராமாயணம் ஆகியன சாப விமோசனத்திற்கு முன்னரேயே அகலிகை வரலாற்றைக் கூறுகின்றன. கம்பராமாயணம், மொல்ல இராமாயணம் தமிழ் வில்லுப்பாட்டு ஆகியன சாப நீக்கத்திற்குப் பின்னர் அதிசயித்து நின்ற இராமனுக்கு அகலிகை வரலாற்றை எடுத்துக் கூறுகின்றன. இம்மாற்றத்தை முதன்முதலில் கம்பன்தான் செய்ததாகத் தோன்றுகிறது. நாடக நலனை மிகுவிக்கும் உத்தியாக அறிஞர் இதனைக் கருதுவர்.

இந்திரனை அறிதலும் அறியாமையும்

அகலிகையின் அழகில் ஈடுபட்டுக் கௌதம முனிவரின் ஆசிரமத்துக்குள் அம்முனிவரின் வேடம் கொண்டு நுழைந்த இந்திரனை, இந்திரன் என்று தெரிந்தே - தன்மீது மோகம் கொண்டு தன்னை அடைவதற்காக மாறுவேடம் கொண்டு

வந்தவன் இந்திரனே என்று நன்கு அறிந்தே அகலிகை அவனை வரவேற்று அவன் விருப்பத்தை நிறைவேற்றித் தானும் மகிழ்ந்தாள் என்று வான்மீகம், மூன்று தெலுகு ராமாயணங்கள், தொரவெ ராமாயணம், எழுத்தச்சன் ராமாயணம் ஆகியன கூறுகின்றன. கம்ப ராமாயண அகலிகைக்குக் கௌதம வேடத்தில் வந்தவன் இந்திரன் என்று தெரியவில்லை. அவனை அவள் வரவேற்றதாகவும் கம்பன் கூறவில்லை. எனவே, கௌதமன் என்றே கருதி வந்தவனின் விருப்பிற்கு உடன்பட்டிருக்கலாம். பின்னர் உறவின் போது இவன் கௌதமன் அல்லன் என்று உணர்ந்தாளாயினும் இச்செயல் தனக்குத் தக்கதன்று என்று எண்ணவில்லை; மாறாகத் தானும் விரும்பி அவனுக்கு உடன்பட்டவளாக இருந்தாள்' என்று கவிஞன் கூறுகிறான்.

வான்மீகி முதலானோர் காட்டும் அகலிகை, விரும்பியே கற்பினை இழந்தாள் என்றும், கம்பன் படைத்த அகலிகை வந்தவன் தன் கணவன் என்று கருதி உடன்பட்டாளாதலின் அகலிகையின் கற்பிழப்பு ஒரு விபத்து என்றும், அவள் வஞ்சமறியாத தூயவள் என்றும், அவள் கற்பரசி என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். 'நெஞ்சினால் பிழைப்பிலாள்' என வரும் கம்பன் தொடரை இக்கருத்துக்குச் சான்றாக்குகின்றனர்.[11]

கற்பென்பது உடல் தூய்மை எனக்கொண்டால் இருவரும் ஒரே பண்பினர்தாம்; உள்ளத் தூய்மை அதாவது, அறிந்தே உடல் தூய்மை அழிய விரும்பாத பண்பு கற்பு எனக் கொண்டாலும் இருவர்க்கிடையே இன்றியமையாத வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. 'ஒக்க உண்டிருத்தலோடும்', என்னும் தொடர், இவளது ஈடுபாட்டையும் 'உணர்ந்தனள்' என்னும் தொடர் தன் கணவனல்லன் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டாள் என்பதையும் 'தக்கதன்று என்ன ஓராள்' என்னும் தொடர் கணவன் அல்லன் தகாது என்று

நினைக்கவில்லை என்பதையும் 'தாழ்ந்தனள் இருப்ப' என்னும் தொடர், பின்னும் விருப்புற்று அவனோடு உறைந்தனள் என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன. எனினும் இருவகை அகலிகையருள், இந்திரனைப் பற்றி அறிந்து, அவனாலேயே விரும்பப்படுகிறோம் என்று ஆணவமுற்று, அவனை விரும்பி வரவேற்கும் கீழ்மைப் பண்பை உடையவளாக வான்மீகம் காட்டும் அகலிகை விளங்குகிறாள். கணவனென்றே கருதி அனுமதித்த ஒருவன் கணவனல்லன், ஒரு கயவன் என்பதை உணர்ந்து கொண்ட பின்னர் விதிர்த்து, எழுந்து எதிர்த்து, விலகாமலும், தக்கது அன்று என்று சிந்திக்காமலும் அவனுடன் இருத்தலை விரும்பித் தொடர்ந்த மனமுடையவளாகக் கம்பனின் அகலிகை படைக்கப்பட்டுள்ளாள்.

கம்பனின் மாற்றம் குற்றத்தின் கடுமையைக் குறைக்கவும், குற்றத்திற்கு அடிப்படையான மன விகாரத்தை நீக்கவும் பயன்படுகிறது. எனினும், 'நெஞ்சினால் பிழைப்பிலாள்' என்னும் தொடர் அகலிகைக்குப் பொருந்துவதாகத் தோன்றவில்லை; கம்பனின் கருத்தாகவும் படவில்லை. ஏனெனில் 'மனைவிக்குரிய மாண்புகளை அழித்து அதனால் இழிதகைமை பூண்ட (கௌதமனின்) மனைவி' என்றும், 'நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள்' என்றும் விசுவாமித்திரனின் வாக்காகவும் 'விலைமகள் அனைய நீயும்' என்று கௌதமனின் வாக்காகவும் குறிப்பிடும் கவிஞன் பினனர் 'நெஞ்சினால் பிழைப்பிலாள்' என்று விசுவாமித்திரன் வாக்காகவே கூறுவானா என்பது சிந்திக்கத் தக்கது. மேலும், இந்தப் பாடலை உடுக்குறியிட்டுக் கம்பன் கழகம் பதிப்பித்துள்ளது. வை.மு.கோவும் இந்தப் பாடல் சில பிரதிகளில் இல்லை என்று கூறுகிறார்.

அகலிகை கல்லுருவம் அடைந்த வரலாற்றைக் கூறும் பரிபாடல் அடிகளுக்கு (19:50-52) உரைவகுக்கும் பரிமேலழகர், 'கல்லுருவெய்தியவாறு இதுவென்று

கொண்டோற் பிழைத்த தண்டம் கூறுவாருமாய்' என்று கூறுவதால், அகலிகை குற்றப் பட்டுத் தண்டனை பெற்றாள் என்பதை அவர் ஏற்றுக் கொள்கிறார் என அறிகிறோம்.[12] 'தேக சௌந்தர்யமும் தேவர்களுக்குரிய தேஜசும் உடைய வேற்று ஆடவரைக் கண்டால் காமவயப்படுதல் மகளிர்க்கு இயல்பு', என்னும் கோணிகாபுத்திரரின் கருத்தை மேற்கோளாகக் காட்டும் வாத்சாயனர், இவ்வாறு ஆசை நாயகனை வைத்திருந்த ஒரு பெண்ணாக அகலிகையைக் குறிப்பிடுகிறார் என்பதும் இங்குக் கருதத் தக்கது.[13]

எனவே, இந்தப் பாடல் கம்பன் பாடலாக இருக்குமா என்னும் ஐயம் எழுகிறது. கற்பு என்னும் ஒழுக்க நிலையில் மிக்க கற்புடைவள், சிறிது கற்புடையவள் என்னும் விழுக் காட்டுத் தன்மையையோ, 'அவளைவிட இவள் கற்பில் சிறந்தவள்' என்பது போன்ற ஒப்பீட்டு ஒழுக்கத்தையோ (Comparative Morality) கம்பன் போற்றுவதாக அவன் காப்பியம் வேறெங்கும் காட்டவில்லை, 'அன்னை நீ போதுகென்னப் பொன்னடி வணங்கிப் போனாள்' என்னும் பாடலோடு கம்பன் இந்தப் படலத்தை முடித்திருக்கலாம். தன் பாத்திரங்கள் குற்றப்பட்டு நிற்குமிடத்துக் கம்பன் பெரும்பாலும் கருத்துரைப்பதில்லை. குற்றச்சூழலை வருணிப்பதுடன் நின்றுவிடுதலைக் காண்கிறோம். வாலிவதையில் இராமனின் மௌனநிலை இங்குச் சிந்திக்கத் தக்கது.

இராமனைப்பொறுத்தவரையில் 'என்னை இவ் வுலகத்தியற்கை' என இக்கதைத் தொடக்கத்தில் வியந்தவன் அவள் கதையை விசுவாமித்திரன் கூறி முடித்ததும், 'மாதவன் கருணைக்குப் பாத்திரம் ஆகும் வண்ணம் நடந்து கொள்க. போய் வருக' என்று அவளுக்கு அறிவுரை கூறுவதைச் சிந்தித்தால், அகலிகையின் குற்றம் பற்றிய இராமனின் கருத்தும், கவிஞனின் கருத்தும் நன்கு தெளிவாகும்.

சாப - விமோசன முறைகளில் வேறுபடல்

இந்திரனும் அகலிகையும் சபிக்கப்பட்ட வரலாற்றில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்திரன் விருட்சணங்களை இழக்குமாறு சபிக்கப்பட்டதாக வான்மீகி ராமாயணம் கூறுகிறது. வடபுல, தென்புல, வழக்குகள் ஆகிய இருவகை வான்மீகங்களும் இச்செய்தியை ஒன்றுபோலவே கூறுகின்றன.[14] கம்பராமாயணம் 'ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாக' என்று இந்திரன் சபிக்கப் பட்டதாகக் கூறி வான்மீகத்திலிருந்து வேறுபடுகிறது. கம்பன் எதன் அடிப்படையில் இவ்வேறுபாட்டைச் செய்தான் என்று தெளிவாக அறியமுடியவில்லை. இங்ஙனம் சபித்ததாகக் கூறியது பிறநூல் மேற்கொண்டாகும் என்று வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் கூறுகிறார்.[15] ஆனால் இவர் கருதும் பிற நூல் எதுவென்று அறிய இயலவில்லை. மூன்று தெலுகு இராமாயணங்களும், பிற வடமொழி இலக்கியங்களும் வான்மீகத்தைப் பின்பற்றியே இந்திரன் சாபத்தைக் கூறுகின்றன. கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய அசாமிய இராமாயணம், விருட்சணங்களை இழப்பதோடு, உடலெங்கும் பெண்குறி தோன்றுமாறும் இந்திரன் சபிக்கப்பட்டான் என்று கூறுகிறது.[16] கி.பி. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த கன்னட தொரவெ ராமாயணம், உடல்முழுதும் பெண்குறியாக ஆகுமாறும், ஆண்மை இழக்குமாறும் இந்திரன் சபிக்கப்பட்டதாகக் கூறுகிறது. எனவே முதலில் கம்பன் மட்டுமே இதில் மாற்றம் செய்துள்ளான் என அறிகிறோம்

இனி இந்திரன் அகலிகையை விட்டுப் பிரியும்போது கெளதம வடிவுடன் சென்றான். என வான்மீகி முதலான நூல்கள் கூற, கம்பனோ ஒரு பூனை வடிவங்கொண்டு வெளியேறினான் என்று கூறுகிறான். நப்பண்ணனாரின் பரிபாடல் பத்தொன்பதாம் பாட்டு (50-52) கம்பன் இம்மாற்றத்தைச் செய்ய உதவியிருக்கலாம்.

அகலிகை பெற்ற சாபம் பற்றிக் கூறுகையில் வான்மீகி ராமாயணங்களே தம்முள் வேறுபடுகின்றன.

वायुभक्षा निराहारा तप्यन्ती भस्मशायिनी

என்று பரோடா பல்கலைக் கழகத் திறனாய்வுத் பதிப்பான வான்மீகம் கூறுகிறது. தேவநாகரி, சாரதா, தெலுகு, கிரந்தம், மலையாளம் மற்றும் நேவாரி ஆகிய எழுத்துகளில் பெயர்த்தெழுதப்பட்ட 86 ஏடுகளைச் சேகரித்து, அவற்றுள் 37 முழு ஏடுகளைக் கொண்டு ஒப்பிட்டுப் பெற்று இந்தத் திறனாய்வுப் பதிப்பு வெளி வந்துள்ளது. இப்பதிப்பு வடபுலவழக்கு (Northern Recension) வான்மீகத்தின் சிறந்த வடிவமாகத் திகழ்கிறது, இனி இது பரோடாப் பதிப்பு என்றுகுறிக்கப்படும்.

वायुभक्षा निराहारा तज्यन्ती भस्मशायिनी

என்று கோரக்பூர் கீதாபிரஸ் வெளியிட்ட வான்மீகம் கூறுகிறது. இது தென்புலவழக்கு (Southern Recension) வான்மீகம். இனி இதனைக் கோரக்பூர்ப் பதிப்பு என்று அழைக்கலாம்.

वायुभक्षा शिलाभूत्वा तज्यन्ती भस्मशायिनी

என்று பாலக்காட்டில் பதிக்கப்பெற்ற வான்மீகம் கூறுகிறது. இதுவும் தென்புலவழக்கு வான்மீகம். இது தர்மாலயாப் பதிப்பு என்று அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட மூன்று பாடல்களிலும் முதல் இரு சீர்கள் (பாதங்கள்) வேறுபட்டும், இறுதி இரு சீர்கள் வேறுபடாமலும் வழங்குகின்றன. மூன்றாம் சீர் 'நொந்த மனமுடையவளாய்' அல்லது 'மனத்தவிப்புடன்' என்றும் நான்காம் சீர் 'புழுதிப் படுக்கையுடையவளாய்' என்றும் பொருள்படும். முதல் சீரைப் பொருத்தவரையில் மூன்று பாடல்களும் 'காற்றையே

உணவாகக் கொண்டு' என்னும் ஒரே பொருளைத் தருவன. கோரக்பூர்ப் பதிப்பு மட்டும் 'வாயு' என்னும் சொல்லுக்குப் பதிலாக 'வாத' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. பொருள் வேறுபாட்டை விளைவிக்காத இந்தப்பாடம் கீழைத் தேவநாகரி ஏடுகளில் மட்டுமே காணப்படுகிறது.

இரண்டாவது சீரின் பாடபேதம்தான் பொருள் வேறு பாட்டைத் தருவதாக அமைந்துவிட்டது. வடபுல வழக்காகிய பரோடா பதிப்பு 'நிராஹாரா' என்னும் சொல்லையும், தென்புல வழக்காகிய தர்மாலயா பதிப்பு 'ஷிலா பூத்வா' என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றன. ஆனால், தென்புல வழக்காகிய கோரக்பூர்ப் பதிப்பு வடபுல வழக்கின் பாடத்தையே கொண்டுள்ளது. தென்புல வழக்குகளில் எல்லாத் தெலுகு ஏடுகளும், சில கிரந்த ஏடுகளும் (G4) வடபுல வழக்குப் பாடமாகிய 'நிராஹார்ரா' என்னும் சொல்லைக் கொண்டுள்ளன. பரோடா பதிப்பு பாடபேதமாக 'ஷிலா பூத்வா' என்பதைக் கொடுத்து G1, G2, G3 என்னும் கிரந்த ஏடுகளிலும் M1, M2 ஆகிய மலையாள ஏடுகளிலும் இப்பாடம் காணப்படுகிறது என்ற குறிப்பைத் தருகிறது. இவற்றுள் G1 கிரந்த ஏடு கொல்லம் ஆண்டு 993இல் (கி.பி. 1818) எழுதப்பட்டது. G2 கிரந்த ஏடு 300 ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டது. சென்னை அரசாங்கக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள G3 கிரந்த ஏடு 500 ஆண்டுகட்கு முற்பட்டது. M1 மலையாள ஏடு கொல்லம் 687 இல் (கி.பி 1512) எழுதப்பட்டது. M2 மலையாள ஏடு கொல்லம் 865இல் (கி.பி. 1690) எழுதப்பட்டது.[17] இவற்றை ஆராயுமிடத்து G3 கிரந்த ஏடும் M1 மலையாள ஏடும்தான் இதுவரை கிடைத்தவற்றுள் மிகப்பழைய தென்புல வழக்கு வான்மீக ராமாயணங்கள் என்பது தெளிவாகிறது. அதாவது கி.பி. 15ஆம் நூற்றாண்டளவில் தென்னகத்தே உலாவிய வான்மீகி இராமாயணம் 'ஷிலா பூத்வா' என்னும் பாடத்தைக் கொண்டிருக்கிறது என்பது உறுதியாகிறது.

இங்கு வான்மீக ஏடுகளைப் பற்றி இவ்வளவு விரிவாகக் கூற நேர்ந்தது என்னையெனின். வடபுல வழக்குப்படி, 'காற்றையே உட்கொண்டு வேறு உணவு எதுவுமின்றிப் புழுதிப் படுக்கையில் மனத்தவிப்புடன் கிடப்பாயாக' என்று அகலிகை சபிக்கப்படுகிறாள். தென்புல வழக்காக மேலே காட்டியபடி, 'காற்றையே உட்கொண்டு கல்லாய்ச் சமைந்து. . . . . கிடப்பாயாக' என்று சபிக்கப்படு கிறாள். வடபுல வழக்கு ஏடுகள் எல்லாமும், தென்புல வழக்கு ஏடுகள்சிலவும் 'நிராஹாரா' என்று பாடம் கொள்ள சில தென்புல வழக்கு ஏடுகள் மட்டும் 'ஷிலா பூத்வா' (கல்லுருவாய்) எனும் பாடங்கொண்டிருப்பது ஏன் என்று இதுவரை நடந்துள்ள ஆய்வால் புலப்படவில்லை.[18] ஆகவே, வான்மீகி இராமாயணத்தைப் பொறுத்த வரையில் வடபுல வழக்கின்படி உணவின்றிக் கிடந்தாள் என்றும், தென்புல வழக்கின்படி கல்லாகிக் கிடந்தாள் என்றும இருவகையான கருத்துக்கள் காணப்படுகின்றன என அறிகிறோம்.

பிற வடமொழி நூல்களைப் பொறுத்தவரையில் காளிதாசரின் இரகுவம்சம் (கி.பி. 4ஆம் நூற்றாண்டு) முதன்முதலாக அகலிகை கல்லாகச் சபிக்கப்பெற்றாள் என்று கூறப்படுகிறது. கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நரசிம்மபுராணம் அகலிகையைப் 'பாஷாணபூத' (கல்லுரு வானவள்) என்று குறிப்பிடுகிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எழுந்த குமாரதாசரின் ஜானகி ஹரணம் அகல்யா கல்லாக மாறினாள் (சருக்கம் 3) என்று காட்டுகிறது.[19] துளசிதாசரின் சமகாலத்தவரான காசி அத்வைத கவியால் கி.பி. 1608-இல் இயற்றப்பெற்ற இராமலிங்காம்ருதம்[20] என்னும் நூல் அகலிகை தன் கணவனால் கல்லாகச் சபிக்கப்பெற்றாள் என்று கூறுகிறது. அத்யாத்ம ராமாயணம் வான்மீகத்தை ஒட்டிச் செல்கிறது.

கம்பன் 'கல் இயல் ஆதி' (1, 9:22) எனச் சபிக்கப் பட்டதாகக் கூறுகிறான். மூன்று தெலுகு ராமாயணங்களும்

தொரவெ ராமாயணமும், துளசி ராமாயணமும் கல்லாகச் சபிக்கப்பட்டாள் என்று கூறுகின்றன. கம்பனுக்கு முன்னர்த் தமிழிலக்கிய மரபில் பரிபாடல் 19ஆம் பாடல்.

இந்திரன் பூசை இவள் அகலிகை இவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிது என்று உரை செய்வாரும் (50-52)

என்று அகலிகை கல்லான செய்தியைக் கூறுகிறது.

வான்மீகியைப் பின்பற்றுவதாகக் கூறும் தெலுகு, கன்னட இராமாயண நூல்கள் அகலிகை கல்லான சாபச் செய்தியை இரகுவம்சம் முதலான வடமொழி நூல்களைப் பின்பற்றிக் கூறகின்றனவா, அல்லது கம்பனை அடியொற்றிக் கூறுகின்றனவா என்று அறிய இயலவில்லை. கம்பனே பரிபாடலைப் பின்பற்றிக் கூறுகின்றானா, ஏதேனும் நாட்டுப்புற வழக்கைப் பி ன்பற்றிக் கூறுகின்றானா அல்லது நரசிம்ம புராணத்தைப் பின்பற்றிக் கூறுகின்றானா என்று துணிய இயலவில்லை. நரசிம்ம அவதாரத்தின் மீது கம்பனுக்குத் தனிப்பற்று உண்டென்பதை அவனே முதன்முதலாகப் பாடிச் சேர்த்த இரணியவதைப் படலத்தாலும், அரங்கேற்ற நாளன்று நரசிங்கமே அவனுக்கு வாழ்த்துக் கூறி அருளிய நிகழ்ச்சியைப் பெரிய கோயிலில் கம்பர் மண்டபத்திற்கு எதிரில் எழுந்து அருளியுள்ள நரசிம்ம மூர்த்தியின் திருவுருவ உண்மையாலும் நன்கு அறியலாம். எது மூலமாயினும், வடமொழி தவிர்த்த பிறமொழி இராமாயணங்களில் தமிழில் எழுந்த கம்ப ராமாயணம்தான் முதன்முதலாகக் கல்லுருவெய்திய செய்தியைத் தருகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இனி, சில தென்புல வழக்கு வான்மீகி இராமாயணங்கள் கல்லாகச் சபிக்கப் பெற்ற செய்தியை எதன் அடிப்படையில் சேர்த்தன என்னும் வினா எழுகிறது. பரோடா பதிப்பு இந்தச் செய்தி தென்னக ஏடுகளுக்கு உரியது

என்று குறிப்பிடுகிறது. இரகு வம்சத்தையோ, நரசிம்ம புராணத்தையோ அல்லது ஜானகி ஹரணத்தையோ பின்பற்றி இவை இந்த மாற்றத்தைச் செய்திருக்கலாம் என்று கொள்ளுவதற்கில்லை. ஏனெனில், இவ் வடமொழி நூல்களை வடபுல வழக்கு வான்மீகங்களே பின்பற்றவில்லை; தென்புல வழக்கு வான்மீகங்களிலும் தெலுகு மொழி வான்மீகங்க்ளும், கீழைத் தேவநாகரி வான்மீகங்களும பின்பற்றவில்லை. அவ்வாறிருக்க, தமிழகத்தே வழங்கிய கிரந்த வான்மீகங்களும், (G1,2,3) மலையாள வான்மீகங்களில் சிலவும் (M1, M2) இந்த வேறு பாட்டைப் புகுத்திய காரணம் என்ன என்னும் வினா எழுகிறது. வேறு தெளிவான ஆதாரத் தகவல்கள் கிடைக்கும்வரை தென்னகத்திலும், குறிப்பாகத் தமிழகத்திலும் பெயர்த்தெழுதப்பட்டு வராநின்ற வான்மீக ராமாயணங்கள் கம்ப ராமாயணத்தைப் பின்பற்றி அகலிகை கல்லாகச் சபிக்கப்பட்ட செய்தியை, 'நிராஹாரா' என்னும் சீருக்குப் பதிலாக 'ஷிலா பூத்வா' எனற பாடத்தைத் தந்து புகுத்தின என்று துணிய வேண்டியுள்ளது.

'வாயு பக்ஷா' என்றபோதே 'காற்றை உணவாகக் கொண்டு' என்னும் பொருள் தருவதால் ஆகாரம் எதுவுமின்றி எனப்பொருள்படும் 'நிராஹாரா' என்ற சொல் மிகையாகப் படுகிறது. இதனாலும் கல்லுருவாய் என்னும் கூடுதல் செய்தியாலும் இந்தப் பாடத்தை இவை ஏற்றுக்கொண்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இவ்வகையில் கம்பன் கருத்தே வான்மீகப் பாடமாக மாறியிருக்கலாமோ என்னும் ஐயம் வலியுறுகிறது.

இந்திரன் சாப நீக்கம் பெற்றதை வடபுல, தென்புல, வழக்கு வான்மீக ராமாயணங்கள் விரிவாகக் கூறுகின்றன. வான்மீகத்தைப் பின்பற்றும் தெலுகு கன்னட ராமாயணங்களும் இச்செய்தியைக் கூறுகின்றன. கம்ப ராமாயணம் இந்திரனின் சாப நீக்கம் குறித்துப் பேசவில்லை சிறுபான்மை ஏடுகளில் மட்டும் காணப்பெற்ற இரண்டு .

பாடல்களைக் கம்பன் கழகப் பதிப்பு மிகைப் பாடல்களாகக் காட்டியுள்ளது. தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இந்திரன் உடலில் தோன்றிய குறிகள் கண்களாக மாறும்படிக் கௌதமன் சாப நீக்கம் செய்ததாக இந்தப் பாடல்கள் கூறுகின்றன. துளசி ராமாயணமும் இந்திரன் சாப நீக்கம் பற்றிப் பேசவில்லை.

இராமன் முதலானோர் கௌதம வனத்துள் புகுந்ததுமே அகலிகை தன்னுருவம் அடைந்து அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டாள் எனறு எல்லா வான்மீக ராமாயணங்களும் கூறுகின்றன. கல்லாக இருந்தவள்மீது இராமனின் பாதத்துகள் பட்டுக் கல்லுரு நீங்கியதாக எந்த வான்மீகமும் கூறவில்லை. அதாவது, கல்லுருவாகச் சபிக்கப்பட்டாள் என்று கூறும் சில தென்புல வழக்கு வான்மீக ராமாயணங்கள் கூட (தர்மாலயா பதிப்பு போன்றன) இராமனின் பாதத்துகள் பட்டுச் சாபம் நீங்கியதாகக் கூறவில்லை. இது மேலும் சிந்திக்கத் தக்கதாக உள்ளது.

இதுவரை கண்டவற்றால், இராம காதையைப் பொருளாகக் கொண்டெழுந்த நூல்கள் பல காலத்துக்கும், பல மொழிகட்கும், பல பண்பாடுகட்கும், உரியனவாகக் காணப்படுகின்றன என்று அறிகிறோம். மேலும் நாட்டு, நகர வருணனைகளைக் கூறுவதிலும், இராமன் சீதை இருவருக்கும் இடையே களவு மணம் நிகழ்ந்ததாகக் காட்டுவதிலும் கம்பன் தனித்து நிற்கவில்லை என்றும், வான்மீகி முதலான பிற கவிஞர்களும் இவ்வாறு படைத்துள்ளனர் என்றும் காண்கிறோம்.

இனி, கம்பராமாயணத்தின் செல்வாக்கால் தென்புல வழக்காக வழங்கிவரும் வான்மீகி ராமாயண ஏடுகள் திருத்தம் பெற்றுள்ளன என்பதையும் கிரக நிலைகள், அகலிகை சாபநீக்கம் என்னும் பகுதிகளிற் காண்கிறோம். தனி யாய்வின் விளைவாக நிலவும் சில கருத்துகள் உண்மையல்ல

என்பதையும், கம்பராமாயணத்தின் செல்வாக்கு நாம் இதுவரை அறிந்திராத சில கோணங்களில் மூலநூலின் மீதே படர்ந்துள்ளது என்பதையும் இந்தச் சிறிய ஒப்பாய்வு நமக்குப் புலப்படுத்தக் காண்கிறோம்.

அடிக்குறிப்பு

1. U.P. Shah 64
2. J.W. DeJong 164-165
3. Niranjan goswami, "A folk painted manuscript of the Rāmacarita manasa Asian variations in Ramayana, 120 121
4. U. Thein Han and Ukhinzaw,"Ramayana in Burmese Literature and arts",
Ramayana Tradition In Asia 312
5. S. Singaravelu, "Tulasidas. . . . Valmīki . . . Kamban . . . and Thai version . . . . The Ramayana Tradition in Asia, 469-70
6. (a) Sachichithanand Sahal, "The Khvay Thuaraphi" The Ramayana Tradition In Asia, 285 - 286
(b) Kamala Ratnam, 240
7. ओंकार कौल
8. Vidya Nivas Misra, 103
9. U.P. Shah, "Ramayana Manuscripts of different versions" in The Ramayana Tradition in Asia ed. V. Raghavan (New Delhi : Sahitya Akademi, 1980, rpt 1989) P 102.
10. தி.சி. கோமதி நாயகம், பக். 220 - 222.
11. தெ. ஞானசுந்தரம், கம்பன் மலர் 1991 (கோவை: கம்பன் கழகம்) பக். 21-22.
12. பரிபாடல் மூலமும், பரிமேலழகருரையும்
உ.வே. சாமிநாதயைர், சென்னை: 1935, ப.141.
13. Biswanarayan Shastri, " Ramayana in Assamese Literature", The Ramayana Tradition in Asia, P. 588 n4.

14. வடபுல வழக்கு : The Valmiki Ramayana Critical Edition (Baroda: M.S. University, 1959) Vol 1 47:26, 27
தென்புல வழக்கு : (1) Srimad Valmiki Ramayana Part I (Gorakhpur : Gita Press, 1969) I, 48:27, 28
(2) Srimad Valmiki Ramayanam The Dhara Malaya Edition (Palghat, Kalpathi: Subrahmanya vadhyar & sons, 1940), 48:30, 31

15. (a) கம்பராமாயணம் - பாலகாண்டம் 9:78, விளக்கவுரை (ப. 413)

16. Biswanarayan Shastri, 588

17. U.P. Shah, p 95

18. பரோடா பதிப்பிற்குப் பின்னர்க் கிடைத்த மிகப் பழைய மலையாள ஏடு ஒன்றில் (M9 கி.பி. 1416) என்ன பாடம் காணப்படுகிறது என்பது இன்னும் அறியப்படவில்லை.

19. ShankarRaj Naidu, 32-33, 35; A.N. Jani, Asian Variations in Ramayana P.37.

20. இந்நூலின்படி இராமன் சீதையைத் தேடிக் காட்டில் அலையும்போது ஒரு கல்லின்மீது அவன் கால்பட்டதும் அகலிகை தன்னுருவம் பெறுகிறாள். அயோத்தியா காண்ட முடிவில் இந்நிகழ்ச்சி நடைபெறுவதாக இந்த நூல் கூறுவது புதுமையாக உள்ளது; வேறெங்கும் காணப்படவில்லை (சருக்கம். 6)

துணை நூற் பட்டியல்

1. ஓங்கார் கௌல் (இந்தி) : காஷ்மீரி, இந்தி மற்றும் வடஇந்திய நாட்டுப்புற இராமாயணங்கள் சண்டிகர் 1974.

2. கம்பராமாயணம் : சென்னை கம்பன் கழகப் பதிப்பு 1976

3. கம்பராமாயணம் : வை.மு. கோபால கிருஷ்ணமா சாரியார் பதிப்பு 1956

4. கம்பராமாயணம் : அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு 1952

5. கம்பன் மலர் : கோவை கம்பன் கழகம் 1991

6. கோமதி நாயகம் தி.சி (ப.ஆ) : சீதா கலியாணம் (வில்லுப்பாட்டு)

7. தக்கை இராமாயணம் : கு. அருணாசலக்கவுண்டர் (ப.ஆ) 1983

8. பரிபாடல் : உ.வே.சா. பதிப்பு 1935

9. வான்மீகி ராமாயணம் : தர்மாலயா பதிப்பு 1940

10. Raghavan . V. (ed) : RAMAYANA TRADITION IN ASIA 1980, 1989

11. Srinivasa Iyengar, K.R. (ed) : ASIAN VARIATIONS IN RAMAYANA 1983

12. VALMIKI RAMAYANA Critical Edition : M.S. University Baroda 1959

13. VALMIKI RAMAYANA : Lahore Edition, 1926

14. VALMIKI RAMAYANA : Gorakhpur Edition, 1969.